திராவிடநாடு

6—3—60 | வார வெளியீடு | விலை 16 காசு

புதுப் புகழ்

—[பே. சா. தனராசு]—

'சிந்துவெளிக் கலைப்பண்பு நமது பண்பு
தென்பொதிகைத் தென்றலது நமது தென்றல்
சந்தனத்தின் தண்மையது நமது பேச்சு
சகலகனி வளமுளது நமது நாடு
விந்தைமிகு களம்வென்றோர் நமது வீரர்
வித்தைபல ஓதுவது நமது ஏடு'
என்றுபழம் புகழ்பாட வேண்டாம்; இன்று
எழுவோம்நாம் புதுப்புகழாம் நாட்டை மீட்க!

முன்னடிமைப் பட்டதில்லை இந்த நாடு!
முடிமூவர் உளத்தினிலே மானம் காத்து,
அந்நியரை வென்றதற்குச் சான்று உண்டு
அடிமைகளாய் வாழ்ந்தாரென் றறிந்தோ மில்லை
அண்ணனொடு தம்பிகொள்ளும் பூசல் கொண்டார்
ஆனாலும் முழுநாட்டை இழந்தா ரில்லை!
பொன்னாட்டை இழக்காத கார ணத்தால்
'போராடி மீட்டபுகழ்' அவருக் கில்லை!

மொழியடிமை நாட்டடிமை எடுத்துக் கூற
முடியாத உணர்வடிமை மூன்றும் பட்டு
விழிபிதுங்க வாழ்கின்றோம்; உணர்ச்சி இல்லை!
வில்லோடும் புலியோடும் கயலை நாட்டி
அழியாத புகழ்கொண்ட அவர்க்கும் கிட்டா(த)
அரியபுகழ் பெறவாய்ப்பு நமக்கு உண்டு!
எழுஞாயிற் றொளிதோன்றும் இந்த வேளை
இனியபுதுப் புகழ்பெறுவோம்! நாட்டை மீட்டு!

தேனாம்பேட்டைத் திருவிழா

—(மா. கி. தசரதன்) –

சென்ற ஞாயிற்றுக்கிழமை (28—2—60) தேனாம்பேட்டையில் ஒரு "அதிசயம்" நடந்தது. 'பார், பார் விநோதம் பார்' என்று மக்களைக் கூவியழைத்துக் காட்டிய பொருட்காட்சி மைதானத்தில், ஆம், காங்கிரஸ்மைதானத்தில்தான் அந்த அதிசயம் நடந்தது. ஒரு சின்னப் பொருட்காட்சி மீண்டும் திறக்கப்பட்டதோ என்றால் அல்ல; மாயாசால வித்தைகள் ஏதேனும் நடந்தனவோ, அல்ல. இவையோ, இவைபோன்று கண் கண்டு களிக்கும் விருந்தோடு மட்டும் அன்றிக் கருத்தும் உண்டு மகிழும் வகையில் தமிழர் திருநாள் ஒன்று அங்கே நடைபெற்றது. அது, கடந்து இரண்டு திங்கள் ஆகப்போகிறதே, இப்போது என்ன அந்தப் பெருநாள் வேடிக்கை வேண்டியிருக்கிறது என்றுதானே கேட்கிறீர்கள்? நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கும் பால் பொங்கி, பொங்கலோ பொங்கல் என்ற பேரொலி கிளப்பிடும் அந்தப் பொங்கல் விழா அல்ல; அன்று நடைபெற்றது.

அன்று தேனாம்பேட்டையில் நடந்தது திருவிழா; தமிழர் பெருவிழா! திருவள்ளுவர் திருவிழா!

அஞ்சலகத்தில் அஞ்சல்தலை, அட்டை, கூடு வாங்கியபோதெல்லாம் உண்மைத் தமிழன், உணர்வு சாகாமல் இருந்த தமிழன், பெருமூச்சோடுதான் வெளிவந்தான். போதிய காற்றோட்டம் இல்லாததால் ஏற்பட்ட புழுக்கல் பெருமூச்சு அல்ல, அவன் விட்டது; தன் மனத்தில் இருந்த புழுக்கத்தை வெளியிட்ட குறை மூச்சு அந்தப் பெருமூச்சு. யார் யாரையெல்லாமோ, அஞ்சல் தலையில் பார்க்கிறேன்! என் மொழியில் பாடிய புலவர் படம் ஒன்றுகூட இதில் இல்லையே என்ற ஏக்கத்தில் பிறந்த நெட்டுயிர்ப்பு அது! அது தணியும் வகையில் அண்மையில் அஞ்சல் தலையிலும், அஞ்சல் கூடுகளிலும் "வான்புகழ் கொண்ட வள்ளுவ"னின் திருவுருவம் வெளிவந்தது.

திரு உருவத்தினைத் தமிழர் தலைநகரில் மக்கள் மன்றத்தில் வெளியிடும் மகிழ்ச்சி விழாதான் அன்று தேனாம்பேட்டை கண்ட தேன் விழா! தெவிட்டாத இன்பத்தை வழங்கிய நல்விழா!

திருவள்ளுவரின் திருவுருவத்தை வெளியிடுவதோடு மட்டும் அல்லாமல், அந்த விழாவில் பங்கு கொண்டு பேசிய ஒவ்வொருவரும் குறிப்பிட்டதுபோல் அது வேறு ஒருவகையில் தனிச் சிறப்பையும், பெருமையையும் கொண்டதாக அமைந்திருந்தது. என்ன அந்தச் சிறப்பு?

"விழா நடக்கின்றவிதம், நடக்கின்ற இடம்" என்று அண்ணா குறிப்பிட்டதைப்போல, அந்த விழா நடைபெற்ற விதத்தில் தனி வரலாற்றைப் படைத்திருக்கிறது.

ஒன்றுக்கு ஒன்று "பிறவிப் பகை" என்று சொல்லப்பட்டு வருகின்ற கட்சிகள் அன்று ஒன்று சேர்ந்து காணப்பட்டன; இவரோடு அவர் பேசுவாரோ, மாட்டாரோ' என்று கருதப்பட்ட தலைவர்கள் நெடுநாள் பழகிய நண்பர்களைப்போல் அளவளாவிக் கொண்டிருந்தனர். தங்கள், கட்சிகளை மறந்துவிட்டு, கொள்கைகளைத் துறந்துவிட்டு அல்ல— இவற்றை இழக்காமல், அழிக்காமல் ஒன்றுகூடியிருந்தனர். ஆம்! திருவள்ளுவரின் பெயரால்—ஒன்றுகூடி இருந்தனர். தமிழர் என்ற உணர்வோடு ஒன்றுகூடியிருந்தனர். "காணக் கண் கோடி வேண்டும்" என்று பாட்டாகக்கூடச் சொல்லி மகிழலாம்.

காங்கிரஸ் மைதானத்திலே விழா! அந்தக் கட்சியின் சார்பாக அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், தி. மு. க. சார்பில் அண்ணா கருணாநிதி, கண்ணதாசன், அப்பாத்துரையார் கம்யூனிஸ்டு கட்சியின் பிரதிநிதியாக ஜீவானந்தம், சமயத் துறைக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளார், மேற்கு நாட்டுப் பிரதிநிதியாக டாக்டர் மோனிக்கா பெல்டன் அம்மையார்—இவர்கள் வீற்றிருந்த அந்த அவைக்குத் தலைவராக ஒரு தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். அ. சிதம்பரநாதனார்!

பிற்பகல் 3-மணிக்கே விழா தொடங்க ஏற்பாடாகியிருந்தது. எதிர்வெயில் என்றாலும், 'எதிர்ப்பைக்கண்டு அஞ்சோம்' என்று கூறுவதுபோல் மக்கள் விழா நிகழ்ச்சிகளைக் காணத் திரண்டு வந்து அமர்ந்திருந்தனர், தமிழின் இசையான நாதசுரம் இனிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தது. அதன் இனிமையிலே மயங்கிய மக்கள் நேரம் போவதே தெரியாமல் அமர்ந்திருக்கின்றனர். 4-மணி அளவில் அண்ணா மேடைக்கு வந்தார். அமைச்சர் சுப்பிரமணியம் அவர் வருகையைக் கண்டதும் முகம் மலர்ந்து இருகை கூப்பி வரவேற்றுத் தன்பக்கத்தில் இருந்த இடத்தைக் காட்டினார். அவரும் அகத்தின் மகிழ்ச்சி முகத்தில் வெளிப்பட அவர் தோளில் கை இட்டுத் தோழமை பாராட்டினார்! அலையெனக் கையொலி பெருகியது. 'காமிரா'க் காரர்கள் சுறுசுறுப்புடன் வந்து சூழ்ந்துகொண்டனர். ஆளுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

[8] ஆண்டுச் சந்தா ரூ. 8. (6—3—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 34

ஒரு யோசனை!

இந்த உபகண்டம் முழுவதிலுமுள்ள இந்துமத தர்ம சொத்துக்களின் விபரத்தை அறியவும், அப்படிப்பட்ட சொத்துக்கள் எந்தவிதத்தில் நிர்வகிக்கப்படுகின்றன — அவை எப்படி நிர்வகிக்கப்படுதல் வேண்டும், அந்தச் சொத்துக்களை நிர்வகிப்போர் எப்படிப்பட்டவர்கள்—தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா? அல்லது நியமனமுறையிலா? இவ்விரண்டு முறைகளில் எது சிறந்தது என்பனபோன்ற விபரங்களை அறிந்து, சர்க்காருக்குச் சிபார்சு செய்யும்படி டாக்டர் சி. பி. இராமசாமி அய்யரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்துமத தர்ம பரிபாலனத்துக்கும் நமக்கும் அவ்வளவு தொடர்பு இருக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை என்றபோதிலும், நாட்டுக்கு நல்ல பல காரியங்களைச் செய்யச் சர்க்கார் முன்வரும் சமயங்களில், நாம், நமக்குத் தோன்றும் யோசனைகளைக் கூறாமல் இருப்பது, கடமை தவறிய—கவலையற்ற போக்காகும் என்பதனை நன்குணர்பவர்களாகையால், இது சம்பந்தமாகவும் சில யோசனைகளைக் கூறவிரும்புகிறோம்.

இந்துமத தர்ம பரிபாலனம் என்பது இந்நாட்டிலுள்ள கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் ஆகியவற்றையும், இன்னும் வேறுசில இந்துமதத் தொடர்புடைய நிறுவனங்களையும் உள்ளடக்கி நிற்பது.

இந்தத் தர்மபரிபாலனம் பல கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நிலங்களையும் நகைகளையும், கட்டிடங்களையும், ரொக்கத்தையும் தன்னிடம் வைத்துக்கொண்டுள்ளது.

எந்த ஒரு கோயிலையோ மடத்தையோ சத்திரத்தையோ எடுத்துக்கொண்டு அதனதற்கும் தனித்தனி எவ்வளவு சொத்திருக்கும் என்று பார்ப்போமானால், குறைந்தது ஒரு இலட்ச ரூபாயாவது மதிப்பிடக் கூடிய சொத்திருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். சில குறிப்பிட்ட கோயில்களுக்கும் மடங்களுக்கும் கோடிக்கணக்கில் மதிப்பிடக் கூடிய சொத்துக்கள் இருக்கின்றன.

சுருங்கச் சொல்லவேண்டுமானால், நாட்டின் செல்வத்தில் பாதிக்குக் குறையாது என்ற சொல்லக் கூடிய அளவில் இந்தக் கோயில்கள், மடங்கள், சத்திரங்கள் ஆகியவற்றில் முடங்கிக் கிடக்கின்றன என்று கூறிவிடலாம்.

எனவே, இப்படிப் பெருந்தொகையான சொத்து, வறுமைப்பிடியில் சிக்கித் தவிக்கும் ஒரு நாட்டில்—ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கு வெளிநாட்டு உதவியை நாடி ஏங்கி நிற்கும் பரிதாபத்திற்குரிய ஒரு நாட்டில், வறிதே முடங்கிக் கிடப்பது முறைதானா என்பதை இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் குழு ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று விரும்புகிறோம்.

கல்வியறிவும், தொழில் வளமும் குறைவாக உள்ள இந்த நாட்டில், அவை ஓரளவுக்காவது நிறைவு பெற, மேற்படி சொத்தில் ஒரு பகுதியை—தேவைக்கும் அளவுக்கும்மேல் முடங்கிக் கிடக்கும் சொத்தில் ஒரு பகுதியை எடுத்துச் செலவு செய்யலாம் என்று சிபார்சு செய்ய இந்த குழு முன்வந்தால், அது, எதிர்காலத்துக்கு—என்றைக்கும் மறையாத மறைக்கமுடியாத பேருதவியாகும்.

இப்படிச் செய்வதன் மூலம் இந்துமத தர்ம பரிபாலனத்துக்கோ அல்லது வேறு எவருக்குமோ குறைவோ நஷ்டமோ ஏற்பட்டுவிடாதென்பதோடு, இப்படிச் செய்வதால் சம்பந்தப்பட்டவர்களுக்குப் புகழே மேலோங்கும் என்பதனையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

எனவே, இந்த யோசனையை இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் குழு ஏற்றுக் கொள்ளவேண்டுமே! பொறுத்திருந்து பார்ப்போம்.

★

வருந்துகிறோம்

காஞ்சிபுரம் நகர பாங்கின் தலைவரும்; நகராட்சி மன்ற உறுப்பினரும்; கண்ணன், கிருஷ்ணா ஆகிய தியேட்டர்களின் உரிமையாளரும்; இன்னும் பல கூட்டுறவு நிலையங்களின் ஆயுளருமான திரு. ஏ. பாலகிருட்டினனார் அவர்கள் தமது 57-வது வயதில் 26—2—60ல் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அவர் சில நாட்களாகவே நோய்வாய்ப்பட்டு வேலூரிலுள்ள அமெரிக்கன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார் என்றபோதிலும், இவ்வளவு விரைவில், இயற்கை அவரை அழைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கவில்லை.

அவருடைய பிரிவால் வருந்தும் அவரது நான்கு புதல்வர்களுக்கும், இரண்டு புதல்வியர்கட்கும், மற்றும் அவரது உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆறுதல் மொழிகளைக் கூறிக்கொள்கிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு படம், எடுத்துக்கொண்டு, நகர்ந்தனர் அண்ணாவும் சுப்பிரமணியரும் சேர்ந்து அமர்ந்து சிரித்து மகிழ்ந்து நிழற்படக்காரர்களுக்கு 'போஸ்' கொடுத்தபோதெல்லாம் மக்கள் ஆரவாரத்தோடு தங்கள் மகிழ்ச்சியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

சற்றுப் பொறுத்துக் கருணாநிதியும், சிவானந்தமும், கண்ணதாசனும் வந்தமர்ந்தனர். மக்கள் திரளும் கணத்துக்கும் கணம் பெருகிக் கொண்டே இருந்தது.

படத்துறை இயக்குநர் கே. சுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்று விழாவினைத் தலைமையேற்று நடத்தித் தருமாறு டாக்டர் அ. சிதம்பரநாதனாரைக் கேட்டுக்கொண்டு உரையாற்றினார்.

தலைவர் தம்முடைய உரையில்,

இன்று மேற்குப் புல, புலவர்கள், அறிஞர்கள் கூறிடும் உயர்ந்த தத்துவங்களை நெடு நாட்களுக்கு முன்னமே கூறினவர் வள்ளுவர் என்றும், அவர் கூறிய கருத்துக்கள் என்றும் எவர்க்கும் ஏற்புடையனவாக அமைந்துள்ளன.

என்றும் பல அரிய செய்திகளை எடுத்து விளக்கி வள்ளுவர் நெறி தழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் அமைச்சர் சுப்பிரமணியம் அஞ்சல் தலையில் வெளிவந்துள்ள வள்ளுவர் திருவுருவப் படத்தினைத் திறந்துவைத்து அதனை எழுதிய ஓவியர் வேணுகோபாலரைப் பாராட்டிப் பேசினார்.

வள்ளுவர் உருவத்தை அஞ்சல் தலையில் வெளியிட்டதினால், வள்ளுவருக்குப் பெருமை என்று நான் நினைக்கவில்லை; வள்ளுவர் உருவத்தை வெளியிட்டதினால் அஞ்சல் துறைக்குத்தான் பெருமை. வள்ளுவர் அத்தனை பெரியவர்; சிறப்புக்குரியவர், அவர்வழி நடப்போம்.

என்று கூறினார்.

வள்ளுவர் படத்தினைப் பாராட்டியும், எழுதிய ஓவியர் சிறப்பினைப் புகழ்ந்தும் பலர் கூறிய கருத்துரைகளையும், எழுத்தோவியங்களையும், கொண்ட நினைவு மலரை அடுத்துக் குன்றக்குடி அடிகளார் அவர்கள் வெளியிட்டு அரிய உரை ஆற்றினார்.

தமிழ்போல் இனிமையான மொழி வேறு இல்லை என்றும், தமிழன் வாழ்வுக்கு இலக்கணம் கண்டவன் என்றும், அவன் மொழியில் உள்ள நூல்—குறள்—வையகத்திற்கு வழிகாட்டும் ஒப்புயர்வற்ற நூல் என்றும், அது நாகரிகத்தைப் பண்பாட்டை வளர்க்கப் பயன்படுகிறது.

என்றும் எடுத்துச் சொன்னார். இடையிடையே உணர்ச்சிமிக்க பகுதிகளிலும், அண்ணாவைக் குறிப்பிடும்போதும் விளித்த போதும் மக்களின் பாராட்டைப் பெற்று அமைந்தது அவருடைய உரை.

சிவானந்தம் அவர்கள் திருவள்ளுவர், தமிழனுக்கு மட்டும் வழிகாட்டவில்லை, உலகத்திற்கே வழிகாட்டியுள்ளார்

என்று விளக்கினார்.

அப்பாத்துரையாரும், மோனிகா பெல்டன் அம்மையாரும் தங்கள் வாழ்த்துரையை ஆற்றிய பின்னர், கண்ணதாசன், வள்ளுவன் வகுத்த அரசியலில் ஒரு முக்கிய பகுதியையும், கருணாநிதி, வள்ளுவரின் இன்பப் பாலின் இனிய சுவையையும் எடுத்து விளக்கினர்.

இறுதியாக, வள்ளுவர் படத்தினை வெளியிட்டு உரையாற்றிய அண்ணா பல அரிய அறிவுரைகளையும் கருத்துரைகளையும் கூறினார்.

"ஆண்டுக்கு ஒருமுறை தமிழர்கள், தங்களுக்குள் இருக்கும் எல்லா வேற்றுமைகளையும் மறந்து தமிழர்கள் என்ற ஒரே நினைப்பில் ஒன்றுகூடி மகிழும் நல்ல நிலை ஏற்படவேண்டும் என்று குன்றக்குடி அடிகளார் நெடுநாட்களுக்கு முன் என்னிடம் தொலைபேசிமூலம் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவருடைய அந்த எண்ணம் இன்று கால்கொள்ளத் தொடங்குகின்றது என நினைக்கின்றேன்.

என்றும்,

நாம் இத்தகையதொரு இனத்தில் தோன்றியவர்கள் என்பது திருவள்ளுவருடைய உருவத்தைப் பார்க்கின்றபோதெல்லாம் தோன்றவேண்டும். இந்தப் படத்தை உங்கள் இல்லங்களில் வைத்துக்கொண்டால் மட்டும் போதாது, உள்ளங்களிலும் பொறித்துக்கொள்ள வேண்டும்.

என்றும்,

திருக்குறளை ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்த்து மிகுதியான பலன் பெறவேண்டும்.

என்றும் மேலும் பல நல்லுரைகளையும் கூறித் தம்முடைய உரையை முடித்தார்.

வேடிக்கை விழாவாகவோ, கேளிக்கைக் கூத்தாகவோ அந்த விழா அமையாமல் மிக்க பயனைத் தந்தது என்பது அனைவரது முடிபாகும். நமக்குள் ஆயிரம் வேற்றுமைகள் இருக்கலாம், இருக்கும். ஆனால் நாம் அனைவரும் ஓரின மக்கள், ஒரு பண்பாட்டைக் கொண்டவர்கள்--ஒரு மொழியைப் படைத்தவர்கள். நமக்குள் ஒரே வகையான பிரச்சினைகள் அடிக்கடி எழுகின்றன. அந்த நேரங்களில் மட்டுமேனும் இதுபோல் ஒன்று திரண்டு விளங்கினால் போதும் — விடிவு

(16-ம் பக்கம் பார்க்க)

இனிக்கும் செய்தி

வாசக அன்பர்களும், விற்பனையாளர்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் **"தம்பிக்கு, அண்ணன்"** எழுதுவது, சித்திரை திங்களில் இருந்து தொடங்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிட நாடு

இமயமும் குமரியும்!

இடம்: கன்யாகுமரி.

நேரம்: அந்திசாயும் வேளை.

நிலைமை விளக்கம்:

[தென் எல்லை கன்யா குமரியும், வட எல்லை இமயமும் சந்திப்பதாகக் கற்பனை. தென் எல்லையைக் குமரித் தாய் என்றும்; வட எல்லையை இமயவல்லி என்றும் பெண் உருவாய்க்கற்பனை செய்யப்படுகிறது.]

இமயவல்லி:- தாயே குமரி! யாரை இப்படி வச்ச விழி வாங்காமல் பார்த்துகிட்டிருக்கே!

குமரித்தாய்:- ஓ...! இமயவல்லியா...! வாடியம்மா வா...! ஏது இவ்வளவு தூரம்? உங்க 'சாச்சா' நேரு; 'படா' பந்தகளெல்லாம் நலமா?

இம:- அவாளுக்கு என்ன குறை! எல்லாம் நல்லாத்தான் இருக்கா மொழுக்கு மொழுக்கென்று! அது கிடக்கட்டும் விடு! இப்படி நீலக்கடலையே வச்ச விழி எடுக்காம பார்த்துகிட்டிருக்கியே யாருக்கு வலை வீசுறாப்போல...

கும:- வலை வீசும் பழக்கம் எங்களுக்குக் கிடையாது! எப்பொழுதுமே நேர்வழிதான்! வலை வீசித் தானே எங்களவங்களை உன் வலையிலே சிக்கவச்சி எங்களை அடிமை ஆக்கிட்டே......இது என்றும் சாசுவதம் என்று எண்ணாதே! இந்த வலை ஒரு நாள் அழத்தான் போகிறது!

இம:- என்னடியம்மா! இத்தனை கோபம்! நாம் இணைந்து இருவரும் ஒன்றாய் இருப்பதால் தானே என்னையும், உன்னையும் அழகாக "இமயமுதல் குமரி வரை" என்று பேசுகிறார்கள்!

கும:- பேசலாம், நாம் இருவரும் ஒன்று என்று! எப்படி நீயும், நானும் ஒன்றாகமுடியும்? அவர்களுக்குத்தான் மூளை இல்லை! உனக்கு எங்கே போயிற்று! ஏகாதிபத்திய வெறிகொண்ட உங்களவர்களும்; உன் வலையிலே சிக்கிய எங்களவர்களில் சிலரும், பூகோளம் படிக்காதவர்களும்தான் கூறுவார்கள் நீயும் நானும் ஒன்று என்று! எங்கள் பரம்பரை வேறு! உங்கள் பரம்பரை வேறு! 'சென்றான் வென்றான்' என்பது எங்கள்பரம்பரை!

இரா. வைத்தியலிங்கம்

'வந்தான் வீழ்ந்தான்' என்பது உங்கள் பரம்பரை! வல்லூறோடு மணிப்புறாவை இணைத்திருக்கிறார்கள்! இரும்போடு தங்கத்தை இணைத்திருக்கிறார்கள்!

இம:- குமரி! ஏன் என்னைப் பழி வாங்குகின்றாய்! சொல் அம்புகளை ஏவுகின்றாய்! என் கவலை உனக்கு எங்கே தெரியப்போகிறது! என் காலடியில் அந்தஅழுமூஞ்சி சீனாக்காரன் குந்திக்கிட்டு உறுமுகிறான்! அச்சுறுத்துகிறான்! அந்தக்கவலையை மறக்க உன்னைக் காணவந்தேன்! நீயோ, எரியும் நெருப்பிலே எண்ணெயைப் பொழிகின்றாய்!

கும:- நான் என்னடி செய்வேன்! நினைத்துவிட்டால் உள்ளம் கொதிக்கவல்லவா செய்கிறது!

இம:- அந்த நினைவைக் கொஞ்சம் ஒத்திவை! நான் சொல்வதைக் கேள்! சற்றுமுன் மகிழ்ச்சியோடு துள்ளாட்டம் போட்டாயே என்ன விசேஷம் இன்று!

கும:- அதுவா! இன்று என்ன நாள் தெரியுமா?

இம:- சொன்னால்தானே புரியும்!

கும:- உனக்கு எங்கேயடி தெரியப் போகிறது! இன்று... முழுநிலா! செங்கதிர் ஞாயிறுமறையும் காட்சியையும்; வெள்ளிநிலாமுழுஉருக் கொண்டு எழும் காட்சியையும் இன்னும் சற்றுநேரத்தில் காணலாம் நீ! இந்தத் துணைக்கண்டத்திலேயே இங்குதான் காணமுடியும் இப்படிப்பட்ட காட்சியை!

இம:- நானும் அதைப் பார்க்கத் தான் வந்தேன் இங்கு! என்னமோ பெரிதாகச் சொல்கிறார்களே என்று!

கும:- இதற்கு முன்னாலே எங்கே கண்டிருக்கப்போகிறாய் இப்படிப் பட்ட காட்சியை! கஜினியையும், கோரியையும்; பாபரையும்தான பார்த்திருப்பாய்!

இம:- என்ன! குமரித்தாயே! பேச்சு எங்கோ... போகுது...!

கும:- எங்கும் போகவில்லை... நடந்த பக்கம்தான் போகுது!

இம:- இதற்கு, நான் என்னசெய்ய முடியும்! அந்த முரட்டு முகம்மதியர்கள் உள்ளே புகுந்தார்கள்... விடவில்லைன்னா என் கதி என்ன ஆகி இருக்கும்...! சோமநாதரே என்ன பாடுபட்டாரு...! நான் எம்மாத்திரம்!

கும:- நீ, வழி விட்டதினாலேதான்

சோமநாதரு... பட்டாரு...! இல்லேன்னு படுவாரா...!

இம:- நான் ஒண்டி அந்த முரடர்களை எதிர்க்க முடியுமா? சுற்றியுள்ள பிண்டங்கள் கோழைகளாய் இருந்ததினலேதான் அவர்களால் நுழைய முடிந்தது உள்ளே!

கும:- அதனுல்தான் சொன்னேன், உங்கள் பரம்பரை வந்தவனிடம் வீழ்ந்த பரம்பரை என்று!

இம:- பழைய நினைவுகளை இப்பொழுது ஏன் கிளறுகிருய்! தள்ளு அதை! நினைத்தாலே உள்ளத்தைக் குத்துகிறது ஒவ்வொரு நிகழ்ச்சியும்!

கும:- ஆமாம்! என்ன... தலை எல்லாம் வெள்ளையாய், பஞ்சுபோல இருக்கு......! தலையில் நரை விழுந்துவிட்டதா?

இம:- அம்மா குமரி! நரையுமில்லை திரையுமில்லை அது! வெண்பனித்துளிகள். இந்தப் பனித்துளிகள் தானே எனக்குப் பெருமை அளிக்கின்றன! எங்கள் நாட்டை வளமாக்கும் பஞ்ச நதிகளே இந்தப் பனித்துளிகளால்தானே! நீ வேண்டுமானுல் பார்த்துவிடு கண்ணீர்த்துளி!

கும:- இந்த விஷயத்தில் உன்னை நினைத்தால் எனக்குப் பொருமைதான் இமயா! கொடுத்து வைத்தவள் நீ!

இம:- ஆமாம்! தலையில் நரை என்று சொல்லி என்னைக் கிழவியாக ஆக்கிவிடப் பார்த்தாயே! வயதில் என்னைவிட மூத்தவள் நீதானே!

கும:- ஆராய்ச்சியாளர்கள் கூறலாம் வயதில் மூத்தவள் நான்தான் என்று! ஆனுல், என்றும் நான் குமரி! கன்யாகுமரி!

இம:- பெயரில்தானே!

கும:. உருவிலும்கூட நான் குமரிதான்! இது விஷயத்தில் நான் வாதாட வரவில்லை உன்னிடம். அழகிகள் இருவர் 'நீ அழகா, நான் அழகா' என்று கேட்பது போல் ஆகும்! தீர்ப்பு அளிக்க வேண்டியவர்கள் நடுவர்!

இம:- அழகிலே நீ சிறந்தவளாக இருக்கலாம்! அறிவிலே வல்லவளாக இருக்கலாம்! ஆனுல்—நாடே என்னை வணங்குகிறது! பரமனும், பார்வதியும் என் முடியிலே இருப்பதாக ஐதீகம்! புராணம்கூட அப்படித்தான் சொல்கிறது!

கும:- புராணம் என்ருலே பொய்மை என்பதுதான் நாங்கள் கொள்ளும் பொருள்! ஒரு சில பிராணிகள் நம்பலாம் உன் சிரசிலே கைலாயம் இருபபதாக! உன் முடியிலே அடிவைத்தவர்கள் (டென்சிங்; எட்மெண்ட் ஹில்லரி) கூறவில்லை, கைலாயத்தைக்கண்டோம் என்று!

இம:- குமரி! யாரிடம் பேசுகிருய் என்பது நினைவு இருக்கட்டும்! இதுவரை பேசினுய், பொறுத்துக் கொண்டேன்! பழங்கதைகளைக் காட்டி என்னை மடக்கிவிடலாம் என்று மனப்பால் குடிக்காதே! இன்று உன்நிலை என்ன? அடிமை நீ எனக்கு என்பதை நினைவில் கொள்!

கும:- அடிமை! யார் யாருக்கு அடிமை! வலை விரித்தாய்! அரசு பறித்தாய்! அடிமை என்று கூறுகிருயே! களத்திலே சந்தித்தாயா? போரிலே வென்ருயா? அடிமை என்று கூற! சூதால், வஞ்சனையால் அரசு பறித்தாய்—ஆளுகின்ருய் அடிமையாக்கி!

இம:- என்னதான் கதறினுலும் நீ எனக்கு அடிமைதான்! அதிகாரம் என் கையில்! நான் நினைத்தால் 'குமரி' என்ற உன்னை 'கிழவி' என்று பெயர் மாற்றி அழைக்க அதிகாரம் எமக்கு உண்டு!

கும:- அதிகாரம் கையில் இருப்பதாகநினைத்துக்கொக்கரிக்கிருய்! கொக்கரித்த அதிகார வர்க்கங்கள் எல்லாம் போன இடம் தெரியவில்லை! நீ எம்மாத்திரம்!

இம:- நீ மட்டும் என்றும் நிலையானவளா! உன் பரம்பரையே இந்தக் கடலுக்குப் பலியாகித்தானே வருகிறது!

கும:- உண்மை! வஞ்சகத்தால் மாறவில்லை! போரிலே புறமுதுகு காட்டி இறக்கவில்லை! பெற்றவள் (இயற்கை) அழைக்கின்ருள் செல்கின்ருேம்! பகைவனுல் பலியாகவில்லை! ஒன்றை மட்டும் தெரிந்துகொள்! எங்கள் பரம்பரை பலியாகத்தான் போகிறது. வெறும் பலி அல்ல! களப்பலி!! "ஆண்ட பரம்பரை மீண்டும் முற்றுகையிடும்! மாண்டிடும் புழுவே கழற்று மகுடம்" என்று முரசு ஒலிக்கும்! ஆயிரமாயிரம இளங்காளைகள் அணிவகுக்கும்! படை பெருகும்! களம் செல்லும்! தடையா, மீறும்! சிறையா, முறுவல் தெளியும்! துப்பாக்கியா, மார்பு காட்டும்! சாவா, யான் பெற்ற பேறு என எண்ணி மகிழும்! பிணங்கள் குவியும்! கல்லறை தொகை தொகையாகப் பெருகும்! விடுதலை வெல்லும்! வேங்கடமும் குமரியும் இணையும்—ஒரு நாள்! அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை மனதில் நிலை நிறுத்திக்கொள்!

இம:- தெற்குப் பக்கம் வந்தாலே இதே தொல்லை! எங்கும் பிரிவினைப் பேச்சு! உரிமை முழக்கம்! நினைத்தாலே வருகிறது நடுக்கம்! அம்மா குமரி! யான் செல்கின்றேன் வடபுலம் நோக்கி!

கும:- போகலாம்... அது என்ன தலையிலே வடு?

இம:- குமரி! பரிகசிக்கிருயா?

கும:- என்னடியம்மா! தலையிலே என்ன வடு என்று கேட்டால் பரிகசிக்கிறேன் என்கிருயே!

இம:- மெய்யாகத்தான் கேட்கிறேன் உனக்குத் தெரியாதா!

கும:- தெரியாமல் தான் கேட்கிறேன்!

இம:- எல்லாம் உங்களவங்க செய்த வேலை தான்! அந்தப்பாவி சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை வடிக்க என்று சொல்லி—என் அழகையே குலைச்சிட்டான் பாவி!

கும:- (குமரித்தாய் பூரிப்பால் சிரிப்பு ஒலி எழுப்புகிருள்.)

இம:- என்னடியம்மா வேண்டியிருக்கு சிரிப்பு! நான் வர்ரேன்...!

கும:- வரவேண்டாம்! போடியம்மா உன்னிடத்திற்கு!

✱

உண்டு கொழுத்து உறங்குவதைத் தவிர வேறு ஒரு வேலையும் செய்ய வேண்டாத வர்க்கமாகக் கடவுளே ஒரு சில மனிதர்களைப் படைத்திருப்பாரேயானுல், அவர்களுக்கு வாயைமட்டுமே படைத்திருப்பார்; கைகளைப் படைத்திருக்கமாட்டார். அதுபோலவே, உழைத்து உழைத்துப் பாடுபடுவதைத் தவிர உணவருந்திப் பசியாற வேண்டாத கூட்டத்தாராக வேறு சில மனிதர்களைப் படைத்திருப்பாரேயானுல், அவர்களுக்குக் கைகளை மட்டும்தான் படைத்திருப்பார்; வாயைப் படைத்திருக்கமாட்டார்.

— ஆபிரகாம் லிங்கன்.

அறிவுக்கூடமா? ஆண்டிகள்பீடமா?

நாளொன்றுக்குக் கோளொன்றைப்பற்றிப் புதுப்புது விந்தையினை வெளியிடும் வெஞ்சமர் வீரர்கள் வாழும் உலகில், பொழுது புலர்ந்ததும் புதுப்புதுக் கடன் பட்டியலைக் காட்டிச் செந்நீரை வியர்வை முத்தாக்கிப், பசி மென்னியைப் பிடிக்கப் பாடுபட்டும் பலன் காணாது, வயிறு குமுற, வறண்டுவிட்ட வாயிதழில் உமிழ்நீரைத் தடவி, உள்ளத்தைக் கனலாக்கி, உதிரத்தை நீராக்கும் உழைப்பாளியை உருக்குலையச் செய்வதில் கை தேர்ந்த நாடு, இந்த நாட்டை எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல. அந்தச் சோகச் சுமையை க்கவேண்டி, ஏதாவது சொல்லப்போனால் நல்ல பல செயல்களைச் சமைப்பதற்கு உதவும்.

நாடாள்வோர் நெஞ்சில் தைத்திருக்கும் நச்சு ஈட்டிகளில், மாணவர்கள் ஏவிய ஈட்டியும் ஒன்றாகும். எத்தனையோ தீராத—தீர்க்க முடியாத பிரச்சினைகளைக் கொண்ட இந்தத் தரித்திர நாட்டில், மாணவர்கள் பிரச்சினையும் ஒன்று. ஒரு நாட்டின் ஆணிவேர் மாணவர் சமுதாயம். பூத்துக் குலுங்கவேண்டிய புதிய சமுதாயத்தைக் காத்துப் பேணவேண்டிய கடமையுள்ளம் படைத்த காளையர்கள் — நாளைய சமுதாயத்தை நலம்பெறச் செய்யப் போகும் புத்துலகச் சிற்பிகள்— மாணவர்களிடம், "குழப்பம்" ஏற்படுகிறது என்றால், அது மிக வருந்தத்தக்கது மட்டுமின்றி, ஆபத்தானதும்கூட.

பொதுவாக நோக்குமிடத்து, வடநாட்டுப் பல்கலைக் கழகங்களில் அடிக்கடி குழப்பமும், போராட்டமும் நிகழ்கிறது. ஆகையினால், தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களை, மக்களை ஆளும் வர்க்கம்—அல்ல, ஆட்சிப் படைக்கும் சர்க்கார், மனமாரப் பாராட்டுகிறார்கள். அவர்கள் தம் சொற்கொண்டு, கற்கண்டாய்க் கூறும் கனிமொழிகளும், புகழ்மாலையும் மாணவர்கள் மத்தியில் பெரும் நகையொலியைத்தான் எழுப்புகிறது. தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களில் அமைதி நிலவுவதற்கும்; அடிக்கடி புகைச்சலும், போராட்டக் குரலும் தோன்றாமலிருப்பதற்கும் இரண்டே காரணங்கள்தான் உண்டு. காந்தியாருக்கு முன்னமேயே "அமைதியையும்; 'இன்னா செய்யாமையையும், போதித்த வள்ளுவர் வழி வந்த இனம்; தென்னாட்டினம் பண்புள்ள சொற்களிலும், பயனுள்ள செயலிலும் நாட்டமிக்குடையவர்கள். 'வெகுளி விழையாமை'யில் வெற்றி கண்டவர்கள்.

கரும்பை—செம்பியன்

ஆகையினால், அநாகரிகச் சொற்களிலும், அழித்தல் தொழிலிலும் அருவருப்புக் கொள்கின்றார்கள். பண்டுதொட்டு வந்த பண்புமிகும் செயல்கள் குருதியோடு, குருதியாய், அணுவோடு அணுவாய் ஐக்கியமாகிவிட்ட காரணத்தினால் பொறுமையில் பெருமையை உணர்கிறார்கள். பிறந்த நாடும், பெற்ற மொழியும், உற்ற இனமும், உண்மைக்கு மாறாக — உரிமையிழந்து — உருக்குலைந்து — வளமிழந்து—வறுமையில் துவண்டும், அவர்களின் அமைதியுள்ளம் இன்னும் ஆர்த்தெழவில்லை. பொங்கும் வெங்கொடுமையும், எங்கும் பரவும் மொழியழிவும், மூடிவிட்ட அவர்கள் விழிகளை — முடங்கிவிட்ட அவர்களின் நெஞ்சுணர்வை நேர்மை வழி நோக்கித் தட்டிவிடும் காலம் மிகத் தூரத்திலில்லை.

இரண்டாவது காரணம்; அவர்கள் வறுமைநிலை. பெற்றெடுத்த தெய்வங்கள் பகலென்றும், இரவென்றும் பாராது, பாடுபட்டுப் பள்ளிக்கனுப்பி வைக்கிறார்கள். கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் மூன்றிலிரண்டு பகுதியினர், ஏழைக் குடிசையின் மன்னர்களும், ஏர் பிடிக்கும் உழவர்களின் மக்களும்—சிறு ஊதிய வருவாய் உள்ளவர்களின் பிள்ளைகளுமாவார்கள். இத்தகைய மாணவர்களுக்கு அரசாங்க உபகாரச் சம்பளம் (Scholarship) கொடுக்கப்படுகிறது. (காங்கிரசு மாறி வேறெந்த அரசாங்கம் வந்தாலும் இதே உதவிநிதி மாணவர்களுக்குக் கொடுக்கப்படும்). ஆகையினால், அவர்கள் பிற செயல்களில் ஈடுபட்டால் — போராட்டப் பரணி பாடத் தொடங்கினால் — குழப்பம் விளைவித்தால்—சம்பந்தப்பட்டவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துக் கூறினால், — அவர்களுக்குக் கொடுக்கப்படும் உதவிநிதி நிறுத்தப்படும். அவ்வளவு ஆண்டுகள் படித்தும் ஒரு "டிகிரி" வாங்காமல் வெளியேறினால்,—தாய் தந்தையர் மனம் புண்படும்—வாழ்வு அழிந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். அதனால் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாலும் ஒரு சில சமயங்களில் அவர்கள் அறியாமலே உரிமைக் குரல் வெடித்துவிடுகிறது. ஆகையினால்தான் தென்னகப் பல்கலைக் கழகங்களில் பெரும்பாலும் அமைதி நிலவுவதாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள்--குருதிக்குப் பதிலாகத் தண்ணீரைக் கொண்டுள்ள உடம்புடைய ஊராள்வோர்கள்.

ஆனால், வடநாட்டில் இந்தநிலை இல்லை. காரணம், வடநாட்டில் பல கனரகத் தொழிற்சாலைகள், ஏற்பட்டிருப்பதினாலும் — வாழ்க்கைத் தரம் தென்னாட்டாரைவிட உயர்ந்திருப்பதினாலும் — பெரும்பாலும் வசதி படைத்தவர்களாய்

மாணவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் அரை குறையில் படிப்பை நிறுத்தி விட்டாலும்; சுரங்கங்களில் பஞ்சாலைகளில்—உரத்தொழிற்சாலைகளில்—மத்திய அரசாங்க அலுவலகங்களில்—செல்வாக்கைப் பொறுத்து இலகுவில் வேலையில் சேர்ந்துவிடுகிருர்கள். ஆகையினுல் அவர்களுக்குப் படிப்பைத் தவிர வேறெந்த நோக்கமோ, கவலையோ, வறுமையோ இருப்பதில்லை. அதன் காரணமாக அவர்களுக்கு இன்னல் தரக்கூடிய சிறுசிரமங்களைச் சம்பந்தப் பட்ட அலுவலகத்தோர்—நிர்வாகத்தினர் — ஆளுவோர் செய்யும் பொழுது பொங்கியெழுந்துவிடுகிருர்கள். முடிவு, போராட்டங்களும் கல்லூரிகளில் கதவடைப்புந்தான் நடக்கிறது.

பொதுவாக இத்தகைய குழப்பங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முனைந்துள்ளது. அதற்காகத் தனிக்குழுக்களை நிறுவி, குழப்பங்களுக்குரிய காரணங்களையும்; அவைகளைத் தடுப்பதற்கான வழிகளையும் கேட்டிருந்தார்கள். இந்த குழுவும் வேறு சிலரும் பல காரணங்களைக் கூறி வருகிருர்கள். ஒருவர் "அரசியல் கட்சிகள் காரணமென்கிருர்" மற்ருெருவர், 'ஆங்கில மொழிதான்' என்கிருர். வேருெருவர் 'ஆசிரியர்—மாணவரிடை நெருங்கிய தொடர்பில்லாதது' எனகிருர். இன்னுமொருவர் 'தேர்வுகளதான குழப்பங்களுக்குக் காரணமென்கிருர்!'. எவர் எப்படிக் கூறினும், திரு. பிரகாசா (பம்பாய்க் கவர்னர்) தலைமையில் அமைத்த குழு ஒரு சில வழிகளைக் கூறியுள்ளது. அவற்றில் முக்கியமானது 'கல்லூரிகளில் மதக்கல்வி' இல்லாதது என்பதுதான்.

இந்தியா பலவித மதங்களைக் கொண்ட ஒரு உபகண்டம். இந்திய அரசியல் சட்டப்படி (Constitution of India) இந்நாடு ஒரு மதச்சார்பற்ற நாடாகும். இங்கு திரு. பிரகாசா குழுவின் தீர்மானப்படி, 'மதக் கல்விமுறை அமுலாக்கப்பட்டால் அரசியல் சட்டத்தைப் புறக்கணித்ததிற்கு ஒப்பாகும். ஆய கலைக்கூடங்கள் ஆண்டிகளின் பீடமாகிவிடும்.

மேலும் அறிவியல் ஆட்சி செய்யும் உலகில், 'மதக்கல்வி' போதிப்பதினுல், இவ்வுபகண்டம் இன்னும் மோசமான நிலையைத்தான் அடையமுடியும். மதக் கல்வியினுல் மூடநம்பிக்கையும், பத்தாம்பசலிக் கொள்கையும் ஏற்படும். இந்நாடு இனிவரும் சமுதாய மக்கள் வாழும் சுதந்திர நாடாக இருக்காது. அரசயலில், பொருளாதாரத்தில், அறிவியலில் உற்சாகப்படுத்த வேண்டியதை விட்டுவிட்டு, அண்டப் புழுகும், அறியாமையும் சூழ்ந்துள்ள புரட்டர்களின் ஏட்டைப் புனிதக் கல்விக்கூடத்தில் போதிக்கச் சொல்கிருர்கள் என்ருல், அதனுல் நாளை நம் திராவிட இனமும் பாதிக்கப்படும். 'விடுதலைப் பாதையில் முன்னேறும் இளங்காளையர்களின் நெஞ்சில், எதையோ தூவ முற்பட்டுவிட்டார்கள், நாட்டின் போக்கை அறியாத காரணத்தினுல்.

உயர்திரு இராமசாமி அவர்கள் தலைமையின்கீழ் நிறுவிய குழு "தகுதியுள்ள மாணவர்களைக் குறைந்த அளவில் கல்லூரிகளில் சேர்க்க வேண்டும்" என்று கூறுகிறது. இத்தீர்மானத்தை நிறைவேற்றினுல், பட்டதாரிகள் குறைவார்கள்—வேலையில்லாத் திண்டாட்டம் கொஞ்சம் ஒழியும் என்பது அவர்கள் எண்ணம் போலும். உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கத் தெரியாதவர்கள், ஊதாரிச் செலவைக் கட்டுபபடுத்தத் தெரியாதவர்கள்—இந்த நாட்டு மழலைச் செல்வங்களைக் கண்ருவியிலே கொண்டுபோய்விடும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார்கள்.

பரந்த கடல்போன்ற விரிந்த வளமுள்ள பூமி இருந்தும், வளம் பெருக்கி வாழத் தெரியாதவர்கள், அஹிம்சை பாடிய அண்ணலின் வாரிசுகள் என்று சொல்பவர்கள், அறநோக்குடைய அசோக பரத் தடிப் புத்தனின் புகழ்பாடுவோர், அன்னையின் வயிற்றிலேயேமழலைச் செல்வங்களுக்குச் சமாதி கட்டுவதுபோல், அறிவுச் செல்வத்திற்கும் அணையிடத் தீர்மானித்துவிட்டார்கள். நாட்டில் பெரும்பான்மையோர் கல்வியறிவு இல்லாதவர்கள். சிறுபான்மை படித்தவர்களுக்கும் வேலையில்லை.

அந்தச் சிறு பகுதியினரையும் கல்வி கற்கவிடாமல் தடுத்துவிட்டால்—இந்த நாடு மேலும் அறியாமையில் மூழ்கும். அப்பொழுது; அறிவுப் பசியாலும் வயிற்றுப் பசியாலும் வாடும் அறியாத மக்களிடம் வெள்ளிப் பணத்தைக் காட்டி அள்ளிக்கொண்டு போகலாம் வோட்டை — அவனியில் இன்னும் நாம் ஆளலாம் நாட்டை என்று எண்ணிவிட்டார்கள் போலும்!

"தகுதியுள்ள மாணவர்கள்தான்" அனுமதிக்கப்படுவார்கள் மேல்நிலைக்கல்விக்கு என்ருல், இன்றைக்குத்தகுதி இருந்தும், எத்தனை ஏழை மாணவர்கள் — எடுத்துச் சொல்ல ஆளில்லாமல், அள்ளி வீசப் பணமில்லாமல் — படித்துவிட்டுப் பஞ்சையாய், பராரியாய் அலைகிருர்கள் வேலையின்றி. இதேபோல் நாளை திறமிருந்தும் ஏழை மகனுக்கு இடமிருக்காது. பாரபட்சம் தலைவிரித்தாடும். பணக்கார இனம்முன்னேறும். பாமரன் பாமரனய் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

ஆகையினுல், ஆளும் இனத்தார்; இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். "குழப்பங்களுக்குரிய காரணங்கள் வேறு சிலவும் உண்டு. மாணவர்கள் சுதந்திரம், உரிமை, மொழி, நாடு, இனம், பண்பாடு அறிவு, ஆற்றல் போன்ற துறைகளில் பெற்றிருக்கும் விழிப்புணர்ச்சி; அவர்களைத் தன்மான உணர்வுக்காகத் தன்னுரிமையைப் பாதுகாக்கத் தூண்டுகிறது. அது காலத்தின் நற்பயன். இத்துறைகளில் அவர்களின் போக்கைப் பல்கலைக் கழகம், தடுக்க எண்ணும்பொழுது அவர்கள் போர்ப் பரணி பாடுகிருர்கள்.

இரண்டாவது, காலத்துக்கேற்றபடி கருத்துக்கேற்றபடி, பல்கலைக் கழகத்தின் விதிமுறைகள், (Rules and Regulations) தேர்வு முறைகள் மாருமலிருப்பதாகும். மூன்றுவது மாணவர்களுக்கு எதிர்கால வாழ்க்கையில் உறுதியான நம்பிக்கை ஊட்டுவதில் அரசாங்கம் தவறி வருவது. இக்காரணங்களே பெரும்பாலும் குழப்பங்களுக்கு அடிப்படையாய் இருக்கிறது. இதையறிந்து பயனுள்ளதை அரசாங்கம் செயல்படுத்த வேண்டும்.

உள்ளுணர்வு

கனகு

அவன் பகல்முழுதும் அலைந்து கொண்டிருந்தான். வெயில்; கொளுத்துகின்ற வெயில். அதை அவன சட்டைசெய்யவில்லை. அப்படியும் அவன் வந்தவேலை நிறைவு பெறவில்லை. மாலையும் வந்தது. மறைந்தது. இருள் சூழ்ந்தது. அலைச்சல் ஒருவாறு ஓய்ந்தது. இனி ஊருக்குப்போகவேண்டும். புகைவண்டி நிலையத்திற்கு விரைந்தான். அரைமணிநேரம் முன்னால் வந்திருக்கக் கூடாதா? வண்டி போய்விட்டது. அடுத்தவண்டி? அது மறுநாள் காலையில்தான்.

திரும்பி மெல்ல நடந்தான். பசியும் தாகமும் உணவு விடுதியை நினைவுபடுத்தின. எதிரில் தெரிந்த உணவு விடுதிக்குள் நுழைந்தான்.

"சுடச்சுட ஏதாவது கொண்டுவா" சொல்லிவிட்டு அமர்ந்தான்.

"சுடச்சுட — சூடாக ஒன்றும் இல்லையே சார். இலேசாக ஆறி இருக்கும். நேரமாகிவிட்டது பாருங்கள்" அவன் கடிகாரத்தைப் பார்த்தான்.

"ஓ, மணி பதினொன்று! சரி, என்ன தான் இருக்கின்றது? கொண்டுவா பார்க்கலாம்"

"உப்புமா சாப்பிடுங்கள்!" பணியாள் கொண்டுவந்து வைத்தான. அதை அவன் பார்த்தான. கண்ணால் பார்த்தான.

"என்ன இது......காலையில் போட்டதா?"

"இல்லை சார். இப்போதான் பகலில்"

"ஓ. பகலில்!—பன்னிரண்டுமணி நேரத்திற்கு முன்னால், இல்லையா?"

"இல்லை, இல்லை. ஆமாம்...சார்"

'சரி, ரொட்டி, பழம், பால்— நல்ல உணவுகள் இங்கே கிடைக்காதவை. வேறு இடம் பார்க்கலாம்"

கிளம்பினான் அவன்.

அவனுக்குத் தேவையானது அந்த வட்டாரத்தில் கிடைக்காது; பஸ் நிலையத்தில் கிடைக்கலாம்; நடந்தான்.

வரிசையாக ஒளிவெள்ளம் பாய்ச்சிக்கொண்டிருந்த கடைகள் எல்லாம் மூடப்பட்டுக்கிடந்தன. கூச்சலும், பரபரப்பும், நெருக்கடியும், நிறைந்து வழிந்த பகுதிகள், இடங்கள் எல்லாம் ஓய்ந்து கிடந்தன. அங்கொன்றும், இங்கொன்றுமாக சில இரவு நேரக் கடைகளிலிருந்து மட்டும் ஒளி தோன்றிக்கொண்டிருந்தது. பாட்டையில் ஆள் நடமாட்டம் இல்லை. எங்கோ மூலைமுடுக்குகளில் சில சமயம் மெல்லவும், திடீரென்று உரக்கவும் கிளம்பிக் கொண்டிருந்த ஒலிகள் மட்டும் அவன் காதில் அப்போதைக்கப்போது விழுந்துவந்தன.

அவன் நடந்துகொண்டிருந்தான். ஆனால், திரும்பிப்பார்க்கவில்லை.

"சார்"

"யார்?--இந்தவேளையில்" திரும்பிப்பார்த்தான்.

மேலே போர்த்திருந்த துப்பட்டாவை அகற்றிக்கொண்டு அந்த உருவம் அவனை அணுகியது. தெருவிளக்கின் ஒளி நன்றாகப்படுமிடத்தில் நின்றுகொண்டது. துப்பட்டா அகல அகல அவன் கண்களும் அகல விரிந்துகொண்டு போயின. தலை நிறைய ஒருபக்கம் கனகாம்பரம் ஒருபக்க டிசம்பர். அவை தொலைவில் போகின்றவர்களையும் சுண்டி அருகில் இழுப்பதற்கு. பச்சைப்பாவாடை, வெள்ளை மேலாக்கு ரோசாவண்ண பிளவுஸ். உடலமைப்பை நன்கு எடுத்துக்காட்ட வெளியில் தெரியும்படி பிரேசியாஸ், அடியில் மிதியடி, ஓசைபடாத இரப்பராலான வெள்ளை மிதியடி, நெற்றியில் திரிசூலப்பொட்டு, உதட்டுக்குச்சாயம், கண்களுக்கு மை, கையிலே சிறியதொரு டம்பப்பை, எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் காட்டிவிட்டு அவனை நெருங்கினாள் அவள்.

"உங்களைத் தொடர்ந்து எவ்வளவு தூரம் வந்துவிட்டேன். பின்னால் திரும்பியே பார்க்கவில்லையே, நீங்கள்!"

சொல்லுக்குச் சொல் அவனை நெருங்கி நெருங்கி வந்தாள் அவள்.

"யாரை? என்னைத் தொடர்ந்தா? ஏன்?"

ஏன் என்று தெரியும், அது யாரென்றும் தெரியும் அவனுக்கு. இருந்தாலும் கேட்டுவைத்தான்.

கேட்டுக்கொண்டு அவன் நடக்கவில்லை. அவளைப பார்த்தபடி நின்றுவிட்டான். அதுபோதுமே அவளுக்கு.

அவள் பேசவில்லை. அவனை ஒரு கணம் உற்று நோக்கிவிட்டுத் தலைமுதல் அடிவரை நோட்டமிட்டாள். திரும்பவும் போய்நின்று கொண்டாள் விளக்கொளி நன்றாகப் படுமிடத்தில். இன்னும் விளம்பரம் தேவை என்று எண்ணினாள் போலும்! மேலாக்கு அடிக்கடி சரிந்து சரிந்து விழுந்துகொண்டிருந்தது. அதைச் சரிப்படுத்துவதற்கே அவளுக்குச் சரியாக இருந்தது.

திரும்பவும் அடி அடியாக அவனை நெருங்கிவந்தாள்.

"போகலாமா?"

அவன் பேசவில்லை.

"சரி, ஆள் மசிந்துவிட்டான்"— அவள் மெல்ல இரண்டடி நடந்தாள். திரும்பிப்பார்த்தாள், அவன் அப்படியே நின்றுகொண்டிருந்தான். அவன் என்னயோசனை செய்கிறான் அப்படி?

திரும்பவும் அவனை அணுகினாள். நின்றாள். அவனை உரசுவது போல் நெருங்கி நின்றாள்.

"போகலாமா?"

'உம்"

அது மிகவும் மெல்லிய ஒலியாக வந்தது. அது அவளுக்கு மட்டுந்தான் கேட்டது. அங்கு வேறு யாரும் இல்லை. அவன் நினைத்துக் கொண்டான் அப்படி;--அவளுக்கு மட்டுந்தான கேட்கவேண்டுமென்று.

அவன் கையைப் பற்றினாள் அவள். அவன் உதறினான். நடந்தாள் அவள் முன்னால். தொடர்ந்தான் அவன்—தயங்கித் தயங்கித் திரும்பவும் வந்த வழியேதான். பாலும், பழமும், ரொட்டியும் அவன் நினைவில் இல்லை இப்போது.

அவள் சென்றாள். அவன் நடந்தான். அதோ, அந்தத் திருப்பத்தைத் தாண்டி, பக்கவாட்டில் அந்தச் சிறிய சந்துக்குள் நுழைகிறாள் அவள். பின்பற்றினான் அவன். சந்துக்குள் செல்ல ஏன் தயங்குகிறான்? தெருவோரம், நிழற் சரிவில் நின்றுவிட்டானே! சுற்றுமுற்றும் பார்க்கின்றானே! ஓகோ, அச்

சமா? ஆமா!'' உள்ளுணர்வு ஏதோ சொல்கிறது நாணமும், வெட்கமும அவனை மடக்குகின்றன. திரும்பவும் நடக்கின்றானே! துணிந்துவிட்டான் போலும்!

இப்போது அவள் உள்ளே நிற்கிருள், அவன் வெளியே; வாயில் ஓரத்தில் உள்ளே இருள். வெளியில் வெளிச்சமும் இல்லை, இருளும் இல்லை. அது நிழற்சரிவு.

''வாருங்கள்!''

''உள்ளே விளக்கு இல்லையா?''

''விளக்கு எதற்கு இப்போது? வந்துவிடுங்கள் இப்படி''

அவள்கையை நீட்டினுள். அந்த நீட்டிய கரம்! எதற்கு அது? ஓகோ, பணத்திற்கு! அந்தக்கரம் நீளுவது அதற்குத்தான். அந்த உள்ளம் இயங்குவது அதற்குத்தான் — பணத்திற்கு.

கொளுந்துவிட்டெரிந்த அவன் வெளி உணர்வு, உடலுணர்வு, மெல்ல அவை அடங்குகின்றன.

உள்ளுணர்வு ஒளிவிடுகின்றது. பேசாமற் பேசுகின்றது. உடற்பசி? அது இருந்த இடமே தெரியவில்லை, ஓடுகிறது

அறையினுள் அந்த இருளை அவன் பார்க்கவே விரும்பவில்லை. அவனுக்கு வேண்டியது வெளிச்சம். அந்த நிழற்சரிவும் பிடிக்கவில்லை.

அவன் கை சட்டைப் பைக்குள் போயிற்று. கையில் சிக்கின இரண்டு நோட்டுகள்; அவை ஐந்து ரூபாய் நோட்டுகளோ, பத்துரூபாய் நோட்டுகளோ! — பார்க்கவில்லை அவன். இருளை நோக்கி எறிந்தான். திரும்பிப்பாராமல் விரைந்தான்.

இப்போது அவனுக்குப் பால் வேண்டா, பழம்வேண்டா ரொட்டி வேண்டா, வேறு எதுவுமே வேண்டா. ஓய்வு தேவை மன அமைதி பெறுதற்கு, மனநிறைவு பெறுதற்கு ஓய்வு தேவை. நடந்தான். ஊர்நோக்கி நடந்தான்.

இப்போது அவனுக்கு ஊன்பசி —உடற்பசி இல்லை; உள்ளுணர்வு கிளப்பிய அறிவுப்பசி. அது அடங்காப்பசி. அந்தப் பசி போக்கும் உணவைத் தேடிக்கொண்டு அவன் நடந்தான். ஊர் நோக்கி நடந்தான்.

★

சோம்பிக் கிடக்காதே!

★ —(வெ. வேலன்)— ★

''சோம்பலகற்று''

''சோம்பித் திரியேல்''

''சோம்பரென்பவர் தேம்பித் திரிவர்''

''சோம்பல் சுகம் கெடுக்கும்''

இவைகள் நம் நாட்டிலே வழங்கி வரும் பழமொழிகள். அதுவும் அனுபவமொழிகள். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே உதித்த திராவிடரினம் இன்றைய ஆராய்ச்சியின் முடிவின்படி உலகம் முழுவதிலும் பரவித் தன்கலை, கலாச்சாரம், பண்பாடு, மொழி முதலியவைகளையும பரப்பி வாழ்ந்தனர் என்பது தெரியவருகிறது. இதை ஆங்காங்கே நிலமகழ்ந்து ஆராயும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் வாயிலாக நாம் இன்று அறியலாம். அன்று அவர்கள் ஓய்வு ஒழிவின்றி உழைத்த காரணத்தால்தான் இன்று உலகத்திற்கே நாகரிகத்தைக் கற்றுக் கொடுத்தமுதல் இனமாகத் திகழ முடிகிறது திராவிடரினம். சிந்து வெளிப் புதைபொருள் ஆராய்ச்சிக்கு முன்பு ஐரோப்பிய அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் யூபிரதாஸ், தைக்கிரீஸ் நீல் நதி பாய்கின்ற மெசபடோமியா அசிரியா, எகிப்து முதலிய நாடுகளே நாகரிகத்தின் தொட்டில் எனக் கருதி வந்தார்கள். ஆனல் அந்த நாகரிகங்களின் பழைமையை ஒப்பிடும்போது நம் நாகரிகம் புனிற்றிளங்குழவியாகக் கருதப்பட்டது. சிந்துவெளி நாகரிகத்தின் காலம் கி. மு. 3500 வரையில் என்று ஊகிக்க இடமிருக்கிறது. இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பாகவே மேநிலை நாகரிகம், கலை பண்பாடு கண்ட நம் திராவிடரினம் எத்தகைய அளவில் விழிப்போடு தன் வாழ்வை நடாத்தியிருக்கும் என்பதை இன்று நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

தாய் வயிற்றிலிருந்து தரையில் விழும்போது நாம் சுறுசுறுப்போடுதான் விழுகிறோம். அத்தகைய நாம் ஏன் நாளடைவில்வளரவளரச் சோம்பலென்னும் கொடுவிலங்கில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கிறோம்? இதற்கு என்ன விடை கூறுவது? காலம் நம்மை அத்தகைய நிலையில் கொண்டுபோய்விட்டதா? அல்லது காலத்தைக் கொன்று பிறர் கையைப் பார்த்துண்ணும் பித்துக்குள்ளிகள்—பக்தியையும் பயத்தையும் காட்டி நம்மிலை பொருந்தும் நாணத்தையும் விட்டு, பல்லைக்காட்டி, பாவையைக் காட்டி, பண்பு எனும் குணத்தைவிட்டு, வெட்டி வேதாந்தம் பேசித்திரியும் வீணர்கள் இத்தகைய இழிநிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்களா? இதில் யாரையும் குறை கூறுவதற்கில்லை. வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பி வீணே சொல்லுகின்றசொல்லிற்குக் கட்டுப்பட்டுப் பகுத்தறிவைப் பயன்படுத்தாது, படுகுழியில் வீழ்ந்த நம்மினத்தைத்தான் குறை கூறவேண்டிய நிலையிலுள்ளோம். கண்ணுன வாழ்வமைத்து வாழ்ந்திட்ட திராவிடரினம் இன்று மண்ணிலே மதிப்பிழந்து, மங்காத வாழ் விழந்து, மன்னரெனும்நிலையிழந்து நிற்கிறது என்றல், இது நம்மவர்களது சோம்பல் நிலையைத்தான் காட்டுகிறது. வீழ்ந்துவிட்ட வரிப்புலியே வீறுகொண்டு தாழ்ந்த உன் வளநாட்டின் தளை விடுப்பாய் எனக்கூறி எழுப்புகின்ற அவர்

களுடைய சுறுசுறுப்பு ஓடி மறைந்துவிட்டிருக்கிறது.

பெருமை மிக்க தமிழ் மரபில் பிறந்தவனே! நீ பிறந்த பொன்னாட்டின் பெருமைதனை நீ அறியவல்லாய். ஆனால் அதன் பெருமை ஊரறியும், நாடறியும், உலகறியும், ஆனால் நீ! 'அறியேன்' என்கின்றாய். இது உன் மடைமையன்றோ? பாரறியும் பழம்பெருமை பகர்வேன் கேள் என உரைத்தார் பரங்கியர். அவரறிந்தார் உன் நாட்டின் கலைச்செல்வம், கனிச்செல்வம் எல்லாம் நன்கே!

உலகம் வாழ உதவிபுரிந்து விட்டுத் தன் வாழ்வைத் தியாகம் செய்துகொண்ட உத்தமனே! நீ செய்தது நன்றே! ஆனால் நீ செய்த நன்றிக்கு நஞ்சிட்டு உன்னையே கெடுத்துக் கீழ்நிலைக்குக் கொண்டு போகும் கயவர்களின் நிலையறிய ஏன் வல்லாய்? நீ ஏன் மாற்றானுக்கு மண்டியிட்டு அவன் கை பார்த்து வாழவேண்டும்? உன் நாட்டின் செல்வங்களை உலகிற்கே பரிமாறலாமே! உன் நாட்டில் எது இல்லை? மற்றைய நாடுகள் எதைக் கொண்டு பணம் பெற்றுக் கொழுத்த நாடாக ஆனதோ, அதையெல்லாம் உன் நாடு பெற்றிருக்கிறதே! ஏன் வீணே மனம் புழுங்கி வேதனைப்பட்டு உன் உள்ளக் கிடக்கையை—குமுறலை வெளிவிடப் பயப்பட்டுச் சோம்பிக் கிடக்கின்றாய்? அரசாண்ட இனவழி வந்த அழகுத் தமிழ் மகனே! நீ ஆண்ட வரலாற்றை இன்னுமா படித்துணரவில்லை? பண்டைத் தமிழகத்தின் பரப்பைப் பார்த்துணர இலக்கியக் கண்ணாடி இயன்ற உதவி புரிகிறதே. ஏன் தமிழ்மகனே உனக்கு இந்த உறக்கம்? நாடுவிட்டு நாடு வந்தவர்கள்—பிழைக்கவந்தவர்கள் மாடாடு மேய்த்துயிர் வளர்க்க வந்தவர்கள், இன்று உன்னைவிட உயர்ந்துவிட்டார்களே! எல்லாம் நீ தந்தவாழ்வு தானே—நிலைதானே என்பதை நீ கொஞ்சமேனும் உணர்ந்தால், நீ அந்த இனத்துக்கு அடிமைப்பட்டுழலச் சம்மதிப்பாயா? எப்படியோ கிடந்த இனமெல்லாம் இன்று ஏறுநடை போடுகின்றன. ஒருமொழி வைத்து உலகாண்ட இனமாகிய நீ—இமயத்தில் கொடி பொறித்து வடவரை வென்றடக்கிய வழிவந்த நீ—கடல் கடந்தும் தன் பெருமையை உணர்த்திவிட்டு வந்த பரம்பரையைச் சேர்ந்த நீ, ஏன் எலியெனப் பதுங்கிச் சோம்பி வாழ்கின்றாய்?

அன்று தமிழ்க்கழகங்கள் வைத்துத் தமிழ்வளர்த்த அறிவுப் பரம்பரையைச் சேர்ந்த மக்கள் வாழும் என் அருமைத் திருநாடே! மாற்றான் வெருண்டோட மார்தட்டிப் போர் செய்யும் மறம்படைத்த இனம் வாழ்ந்த மங்காத் தமிழ் நாடே! நீ ஏன் இன்று எடுப்பார் கைப்பாவையாக இருந்து ஏளனத்துக்குள்ளாகின்றாய்? நீ கண்டது தமிழ், உண்டது தமிழ், உயிர்த்தது தமிழ் ஆயிற்றே! உன் அன்னை உனக்குக் குழந்தைப் பருவத்தில் ஊட்டியது தமிழ்—அதுவும் வீரத்தமிழல்லவா? பின் ஏன கோழைத்தனங் கொண்டு, வாழ வந்த ஒரு இனத்துக்குப் பயந்து கொண்டாய்? தமிழ் கெடுத்து கொடுமொழியாம இந்தியினைக் கொள்கின்றாய்? உன் வீரமும், தமிழ் மேல் கொண்ட பற்றும் மாற்றானுக்கு மண்டியிடா மனவளமும் எங்கே ஓடி ஒளிந்துவிட்டன? ஏன் இந்தச் சோம்பல் நிலை உனக்கு வந்துற்றது? "ஒரு நாட்டைக் கெடுக்க அவன் மொழியைக் கெடு" என்ற ஒரு ஆங்கிலப் பழமொழிக்கு இலக்காக அவர்கள் இன்று உன் மொழியைக் கெடுக்கப் பார்க்கின்றார்கள். உன் நாட்டின் கலை, பண்பாட்டை ஒட்டி ஒழித்துவிட எண்ணமிட்டுவிட்டார்கள். உன் நாகரிகம் இன்று அவர்களிடத்திலே சரணடைகிறது. இதையெல்லாம் நீ எப்படித்தான் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறாயோ! தன்னைத் தாழ்த்திப் பிறரை வாழ்த்திப் பேசும் நல்லுணர்வு கொண்ட தமிழினமே! உன் நற்குணத்தைப் பாராட்டிப் பேசும் பேரறிஞர்கள் இங்கன்றி வேறெங்கும் இல்லை என்பதை நீ எப்பொழுதுதான் உணரப்போகிறாயோ?

உலகத்துக் காடுகளையெல்லாம் அழித்து ஓயாது உழைத்து ஒளிமிக்க கலையமைத்து நாடு உண்டாக்கிக் கொடுத்த தமிழரினம் இன்று அந்தந்த நாட்டினரால் அடித்து விரட்டப்படுகின்ற அளவுக்கு உள்ளதே என்பதை நீ கொஞ்சமாகிலும் உணர்ந்திருந்தால், உன நாட்டில் நீ வந்தோருக்கெல்லாம் வாழ இடம் கொடுத்துவிட்டு வாய் பொத்திக் கைகட்டி நிற்பாயா? சிங்களத்தில் இருக்க இடமின்றித் த்வியாய்த் தவிக்கும் நிலையிலுள்ளோர் எவ்வளவோ! மலேயாவில் உற்றார் உறவினரைப் பிரிந்து உயிர் ஊசலாடும் நிலையிலுள்ளோர் எத்தனை! சாவகத்தில் செத்துமடிவோர் தொகை எவ்வளவு? இந்த நிலையெல்லாம் ஏன்? "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்—வெறும் சோற்றுக்கே வந்ததிந்தப் பஞ்சம்" என்ற பாரதியாரின் உணர்வுமிக்க வரிகளைத்தான் இதற்கு விடையாக அளிக்க முடியும். இத்தகைய அவல நிலை உனக்கு ஏன் வந்தெய்த வேண்டும்? உண்ண உணவில்லையா? உணவை விளைவிக்கும் உழு நிலங்கள் இல்லையா? உழைப்பதற்கேற்ற உறுதியுள்ள தடந்தோள்களில்லையா? வளங்கொழிக்கும் பொன் பூமியாயிற்றே உன் பூமி! வற்றாது நீரோடும் ஆறாயிற்றே உன் நாட்டில் ஓடும் ஆறு. செந்தமிழால் பெற்ற செங்குருதியாயிற்றே உன் உடலில் ஓடுகின்ற இரத்தம். இதையெல்லாம் நீ எங்கே உணரப்போகின்றாய்! உணர்ந்திருந்தால் இவ்வளவு இழிநிலையிற் கிடந்து வருந்துவாயா? உன் நாட்டில் விளைந்த உணவுப் பொருளை உன் நாட்டு மக்கள் உண்டதுபோக எஞ்சியதை வெளிநாட்டிற்கனுப்பிய அந்தக் காலம் எங்கே? கண்டியரசன் பராசிங்கனுக்கு உணவனுப்பிப் பஞ்சத்தைத் தீர்த்த வெண்ணெய்நல்லூர்ச் சடையன் வாழ்ந்த நாடாயிற்றே உன்நாடு, பாரி பரம்பரையில் வந்தவனே! நீ பாவிகளின் மத்தியில் அகப்பட்டுக் கஞ்சிக்குப் பல்லிளித்துக் கெஞ்சுகின்ற நிலை வந்ததே! இது ஏன் வந்தது என்று எனருகிலும் எண்ணிபபார்த்ததுண்டா? ஏது உனக்கு நேரம்? உண்டுண்டு உறங்குவதேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே என்ற நிலையில், சோற்றால் அடித்த பிண்டமாய்—நடைப்பிணமாய்—கொட்டக் கொட்டக்குனிந்து கொடுக்கும் அறிவிலியாய் இந்த உலகில் அடிமையான வாழ்வு வாழத்தான் உன் நேரமெல்லாம் கழிந்துவிடுகிறதே! நீ ஏன் உன் நாட்டை நினைக்கப் போகிறாய்? நாடு சுடுகாடானால் நமக்கென்ன? நாட்டின் வளங்களையெல்லாம் எவர் கொண்டுபோனால் தான எனக்கென்ன? எவனோ ஆள்கிறான். எப்படியோ நமக்குத் தொப்பை நிரம்புகிறது என்றெல்லாம் நினைத்தும பேசியும் பண்டைப் பெருமக்கள் தேடிவைத்த பெருமையையும் கொன்று குப்பை

யிலே போட்டு விடுவாய் போலிருக்கிறதே! ஐயோ தமிழினமே! உன்னை என்னென்று கூறுவேன்! ஓங்கிக்கிடந்த உன் ஒய்யார வாழ்வு இனியும் வந்தெய்துமா என்று எண்ணி ஏங்குகிருயா? இதில் ஏன் உனக்கு இத்துணை ஐயம்? "தாய்த்திருநாட்டைத் தகர்த்திடும் மிலேச்சரை மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வு கொல்?" என்று அன்று பாரதிக் கவிஞன் கூறினனே, அதை நினைவுபடுத்திக் கொள்—நாடிழந்து மக்களையும் நல்லாளையும் பிரிந்து வீடிழந்துங் குற்றிடவே துடிக்கும் வெல்லத் தமிழினத்தை வரவேற்க இங்கு ஆளில்லையா! சொந்த நாட்டானுக்குச் சோறளித்து, இருக்க இடமளிக்கத் துணிவுண்டா உனக்கு? உண்டென்ருல் எங்கே செய் பார்க்கலாம்! ஏன் விழிபிதுங்கச் சுற்றுமுற்றும் பார்க்கின்ருய்? அதோ! நீ என் செய்வாய்! உன்னிடத்தில் இல்லை அத்துணை பெரிய அதிகார அமைப்பு. எல்லாம் வடவரிடம்—தில்லி ஆதிக்கத்திடந்தானே இருக்கிறது. வெளியிலிருக்கும் உன் உறவினனை வீட்டிற்கழைக்கவும் பயப்படுகின்ற காலம் வந்ததைக் கண்டும் எழுச்சியுருத கோழை மனங்கொண்டவனே! எதற்கெடுத்தாலும் தில்லிக்குக் காவடி எடுக்கின்ருயே! உனக்கு வெட்கமில்லை? தொண்டையில் சோறு விக்கிக் கொண்டாலும் தண்ணீர் குடிக்கக் கூடத் தில்லியின் அனுமதி பெறவேண்டுமென்ற நியதியை ஏன் இந்த நாட்டிலே நீ ஏற்படுத்திக்கொண்டாய்? இப்படித்தான் வாழ்ந்தார்களா உன் முதாதையர்கள்? நின் குன்றனைய தோளெங்கே? சேரனும், சோழனும், பாண்டியனும் அமர்ந்து ஆட்சி செய்த அரியணை எங்கே? அவர்கள் வளர்த்த தமிழெங்கே? பண்பெங்கே? பண்டைப் பெருமை எங்கே? உலகுக்கு நாகரிகம் கற்றுத்தந்த உன்வளம் படைத்த அறிவெங்கே? தேனீயாய் உழைத்துத் தேடிவைத்த பொருளெங்கே? ஏன் மருள்கின்ருய்? இத்தனை வளங்கொழிக்கும் வண்டமிழ்நாடா நம்நாடு என்று மலைக்கின்றனையா? ஏன் மலைக்கமாட்டாய். நீ வரலாறு படித்திருந்தால் பிறந்த நாட்டிற்குப் பெயர்வைக்கத் தயங்குவாயா? "செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்ற பாரதியார் வாக்குணர்ந்த நல்லவனுய் இருந்தால் நீ வாழும் நாட்டிற்கு "தமிழ் நாடு" என்று பெயர்வைத்திருப்பாயே! மூன்ரும் வகுப்பு மாணவனும் நம் நாடு எது என்ருல் தமிழ் நாடு என்பானே! இதை ஏன் நீ மட்டும் உணரவில்லை? உணராமலா இருப்பாய்? உணர்ந்துஎன்ன ஆகப்போகிறது, வாய்திறக்க வழியில்லையே. வழியெல்லாம் வடவரிடமல்லவா இருக்கிறது. அந்தோ! நீயும் ஒரு இனமாகத் தலைநிமிர்ந்து நடக்கிருயே! கால் நடக்கக் கூசவில்லை? நீ நிமிர்ந்து நடைபோடும்போது பக்கத்தேயுள்ள உரிமையையடைந்த சீரைப்பாத்திநாடுகள் உன்னைப் பார்த்துப் பரிகசிக்கவில்லை! சிறு சிறு நாடெல்லாம் இன்று சிரம் நிமிர்த்தி உரிமைநடை போடும்போது, உரிமையில்லா உயிரற்ற பொம்மைபோல் உலவிடும் உங்களைப்பார்த்து ஏளனம் செய்யும்போதெல்லாம் உங்கள் குருதி கொதிக்கவில்லையா? எங்கள் உடம்பில் என்ன இரத்தமா ஓடுகிறது? கூவத்தில் ஓடுகின்ற நீரல்லவா ஓடுகிறது என்கிறீர்களா? அப்படியும் இருக்குமா? தூயதமிழ் இரத்தம் ஓடினுல் இப்படியெல்லாம் வந்தவனுக்கு வால்பிடித்துக் கொண்டு அவர்கள் சுழற்றிவிடும் பம்பரமாய் வழியற்று வாய்ப்பற்றுச் சோம்பிக் கிடப்பீர்களா?

பிரஞ்சு சாம்ராச்சியத்தைப் பெருமைப்படுத்திய நெப்போலியன் மோனேபார்ட் என் அகராதியில் "முடியாது" என்ற சொல்லே கிடையாது என்று கூறினுன். அவன் மனிதன். அமெரிக்காவில் அடிமையைக் கொடுமைபடுத்தும் முறையை ஒழிப்பேன் என்று கங்கணங்கட்டி ஆண்டாண்டு காலமாய் அழிக்கமுடியாத வரலாற்றை அழித்துப் புதிய வரலாற்றைக் கண்டான் ஆபிரகாம்லிங்கன், அவன் மனிதன். இந்தியா சுதந்திரம் அடைந்தபோதே தனக்குத் தனி இடம் வேண்டுமென்று போராடி இந்தியாவைப் பங்கு போட்டுப் பாகிஸ்தான் என்று பெற்றுக்கொண்டானே ஜின்னு, அவன் மனிதன். ஆனுல் பதவியே பரம ஔடதம் என்று தன் நாட்டையும் வடநாட்டுக்கு அடகு வைத்துவிட்டு அவர்கள் தருவதைமட்டும் பெற்று உண்டு இறுமாந்து, எழில் திருநாட்டைச் சுடுகாடாக ஆக்கப்பார்க்கும் உன் நாட்டவரும் அவர்கள்போல் உரிமைவேட்கை உடையவர்களாக ஆகவேண்டாமா? நம் தமிழ் மண்ணில் செத்துவிட்ட ஒரு மொழி—பயில்வதற்கு யாருமற்ற மொழி இன்னும் உலவி வருகிறது என்ற நிலை இருக்கிறது. அதற்கு நம்மில் சிலது சப்பைக் கட்டுக் கட்டிச் சரிசெய்கிறது. ஸ்ரீக்கு ரீட்டுக் கிழிக்கும் நேரத்தில் அது பைத்தியக்காரத்தனம் என்று கூறிப் பித்தலாட்டம் ஆடுகிறது. இவர்களை எப்படி ஐயா மனிதர்கள் பட்டியலில் சேர்ப்பது? அற்பப் பதவிக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு இன்பத் திராவிடத்தை வேருெரு கும்பலிடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கி நிற்கிருயே! இது உனக்குத் தருவது ஒரு நாளை இன்பம். ஆனுல் தொடர்ந்து துன்பம் அனுபவிக்கின்றவர்கள் உனது எதிர்கால பரம்பரையினரென்பதை நினைவில் வைத்துக்கொள்.

எட்டுத் எக்கும் சென்று வெற்றி முரசம் கொட்டிய வீரர்வழி வந்தவனே! இன்று நீ சோம்பிக் கிடக்கும் நிலைகண்டு ஏய்க்கின்ற கூட்டம் உன்னைச் சூழ்ந்துவிட்டது என்பதைத் தட்டியெழுப்பிக் கூறுகின்ற நிலை வந்துங்கூட இன்னும் ஏன் உறக்கம் கொள்கின்ருய்? குரைக்க வரும் நாய்க்கு ஒரு எலும்புத் துண்டு என்கின்ற அளவில் வாழ்வதா?

சிறு சிறு நாடுகளெல்லாம் உரிமையடைந்து, இன்று அமோக மதிப்பைப் பெறுகின்றது வெளிநாடுகளில். அந்த நாட்டு அமைச்சர்களோ முதல் அமைச்சரோ வெளிநாடு செல்லின் ஏராளமான வரவேற்பு. ஆனுல் தமிழினமே—திராவிடக் கூட்டினமே உனக்குத் தனித்த நாடு உண்டா,! உனக்கு வெளிநாட்டில் மதிப்பிருக்கா! உன்னைப் பார்த்து வேறு நாட்டுக்காரன் நீ யார் என்று கேட்டால் என்ன பதில் அளிப்பாய்? நான் திராவிடன் என்று சொல்லக் கூசிடுகின்ருய். நீ ஒரு திராவிடன் என்பதை உணராமல் வாழ்கிருயே! இதுதான் நீ மானத்தோடு வாழ்வதன் இலட்சணமா?

ஒரு காலத்தில் சந்தனக் கட்டையை வைத்து அடுப்பெரித்தோம். இன்று அடுப்பில் பூனை தூங்குகிறது. நம் நாட்டுப் பெண்கள் குளித்த கூந்தலுக்கு அகிற் புகையல்லவோ ஊட்டினுர்கள். சந்தனத் தைலத்தைத் தலைக்கிட்டுச் சீவி முடித்த கூந்தலிலே இன்று

ஈரும் பேனும் அல்லவா பிடித்துச் சடைபட்டுப் போயிருக்கின்றது. நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பாக இருந்த உன் நிலையை—நீ வாழ்ந்த வாழ்வை—நீ வகுத்த வழியைச் சற்றே திரும்பிப் பார்.

எங்கும் இந்தி, எதிலும் இந்தி, மைல் கற்களிலே இந்தி, இனி நம் மண்டையோட்டிலேயுங்கூட இந்தி எழுதப்படும் என்ற வெறியாட்டச் செய்தி! மானமுள்ள ஒவ்வொருவருடைய அடிவயிற்றிலேயும் நெருப்பிட்டதுபோலல்லவா இருக்கும்! திரைப்படங்களிலே செய்திப் படம் போட்டுக் காட்டுகிறார்களே, உன் நாட்டிற்கு நல்லது செய்துவிட்டோமென்று கதையளக்கும் ஐந்தாண்டுத் திட்ட வாய்ச்சொல் வீரர்கள், அந்தப் படத்திலே ஏதேனும் உன் நாட்டைப் பற்றியோ, அல்லது உன் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியோ காட்டவேண்டுமே! காட்டினார்களா? அதைப் படம் பார்க்கும்போது தான் சிறிதாகிலும் சிந்தித்ததுண்டா? யாருடைய பணத்தில் யார் மஞ்சள் குளிப்பது? வடக்கு தெற்கென்ற ஓரவஞ்சனை எங்களுக்குச் சிறிதும் கிடையாது என்று கூறிக் கதையளக்கும் வடவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? வடக்கிற்குச் செய்வதையெல்லாம் தெற்கிற்கும் செய்திருக்கவேண்டும். செய்தனரா? செய்யவில்லையே! இப்படி ஒரு கண்ணிலே வெண்ணெயையும் ஒரு கண்ணிலே சுண்ணாம்பையும் வைக்கின்ற அரசை என்னவென்று கூறுவது!

பொறுத்தது போதும் என் பொன்னான நல்லினமே! சோம்பல் தவிர்த்துச் சொக்கிடும் கண்களைத் துடைத்துக்கொண்டு குன்றனைய தோளுக்கு உணர்வூட்டிப் புறப்படு. சோம்பிக்கிடந்தவன் என்றும் சுகம் கண்டதில்லை. வீம்புக்கு வேலை செய்தவன் வாழ்வில் வெற்றி காண்பதில்லை. தூங்கியது போதும் துடித்தெழு. நீ நினைத்தால் நின் பகை உனக்கு எம்மாத்திரம். இனி பொறுத்தால் உன்மொழிச் சாகும்! மொழி செத்தால் நீ சாவாய்!! நீ செத்தால் உன் பழம் பெருமைச் சாகும்!!! விழித்தெழு. வெற்றி உனக்கே!

★

இரண்டாள் உயரத்திற்குமேல் இருக்கும். எழுத்து ஒவ்வொன்றும் மூன்றடிக்குமேல். 'பயர்ஸ்டோன்' டயர் கம்பெனியின் விளம்பரம்தான் அது. காரிலே சவாரி போவோரின் கண்ணைக் கவர நிறுத்தப்பட்டிருந்தது.

விளம்பரத்திலே அதியம் என்ன? வீதியின் இருபுறமும் பிரம்மாண்டமான விளம்பரங்கள் காட்சி தரும் தெருக்களில் மவுண்ட்ரோடும் ஒன்றாக இருக்கும்போது...! ஆனால் எத்தகைய விளம்பரமும் இந்த ஒரு விளம்பரத்தைப்போல் துயரம் தரும், அருவருப்பை உண்டாக்கும் நினைவுகளை எழுப்பினதே இல்லை.

அழகான விளம்பரம்தான். அவசியமான பொருளைப்பற்றித்தான் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். கார்களுக்கும் லாரிகளுக்கும் தேவையான டயர்களைப் பற்றிய விளம்பரம், ஏன் கவலையைத் தருகின்றது?

தெருவிலே நடந்துசெல்லும்பொழுது உங்களைத் திடீரென்று நான்கு பேர் சேர்ந்து, கையையும் காலையும் கட்டி, ஒரு வண்டியில் போட்டு, கப்பலேற்றித் தொலைவிலே உள்ள ஒரு ஸ்பானிஷ் தீவில், அடிமையாக விற்றுவிட்டார்கள் என்றால் உங்களுக்கு எப்படி இருக்கும்?

கடைத்தெருவுக்கு அனுப்பிய உங்கள் பையன், திரும்பி வருவானென்று நீங்கள் எதிர்பார்க்க, அவன் அம்மா! அம்மா! என்று கதறியழுதுகொண்டு, கட்டப்பட்ட கால் கைகளுடன், கப்பலின் அடித்தளத்தில் யாத்திரைபோனால் எப்படி இருக்கும்?

எப்பொழுதாவது, கையில் காசில்லாமல், சொந்த அண்ணனை, தம்பியை அல்லது வீட்டில் உள்ள குழந்தைகளை அடமானம் வைத்துப் பணம் வாங்கி இருக்கிறீர்களா? அடகு வைக்கப்பட்ட பொருள்கள் கடன்காரனுடைய அடிமையாக வாழ்கின்ற காட்சியைக் கண்டிருக்கிறீர்களா?

அரசாங்கம் விதிக்கின்ற அபராதத்தொகைகளைக்கட்டுவதற்குப் பணம் போதாமல், ஈன்றெடுத்த செல்வங்களை ஈடுவைத்துப் பணம் வாங்கி, அபராதத்தை செலுத்துகின்ற விடுதலைப் போர்வீரர்கள்; சம்பளம் வாங்காமல் வேலை செய்யும் ஆட்கள். அயராது உழைக்க வேண்டும். அயர்ந்தால் சாட்டையடி; உணவுண்ணக்கூட நேரம் கிடையாது. காலம் தவறி வேலைக்குச் சென்றால் கடுமையான சாட்டையடி. கூடையிலே மண் தூக்கிச் செல்லும்போது, பாரம் தாங்காமல் தடுமாறினால் சாட்டை அடி; சாட்டை அடி தாளாமல் கீழே விழுந்தால் அபராதம். அபராதத் தொகையைக் கட்ட, பெற்ற மகனை அடமான வைக்கும் தந்தையும் தாயும்.

இந்த நிகழ்ச்சிகளைத்தான் பயர்ஸ்டோன் கம்பெனியாரின் விளம்பரம் நெஞ்சத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறது. செங்குருதி நீர்பாய்ச்சி, களத்திலே உயிரைப் பணயம் வைத்துப் போராடி, விடுதலைபெற்ற நாட்டைப்பற்றிய வரலாறுகளைப் படித்திருக்கிறோம். பணம் கொடுத்தே ஒரு நாட்டை

விலைக்கு வாங்கிய புதிய வரலாற்றை பயர்ஸ்டோன் கம்பெனி தருகிறது. 80,000 ஏகர் நிலத்தைச் சொந்தமாக வாங்கி, அதில் 90 இலட்சம் இரப்பர் மரங்களைப் பயிரிட்டு, மரத்திலிருந்து கிடைக்கும் இரப்பர் பொருளை விற்று உலகம் முழுவதும் பண்டசாலைகள் வைத்து விற்றுப் பணக்குவிக்கும் பயர்ஸ்டோன் கம்பெனியில் மூலதனமதான் "லைபீரியா". உலகில் உள்ள ஆயிரக்கணக்கான மோட்டார் வண்டிகளுக்குத் தேவையான பட்டைகளைத் தயாரிக்கும் இந்த நாட்டின் மனிதன் நடமாடுவதற்குச் சரியான பாதை கிடையாது. இந்த நாடு பூராவும் உள்ள பாதைகளைக் கணக்கெடுத்தால் மொத்தம் 800 மைல் நீளம் கூடத் தேருது. ஆனால் நாட்டின் பரப்பு 43,000 சதுரமைல். மக்கள் தொகை 15 இலட்சம். லைபீரியாவின் தலைநகரம் மன்ரோவியா. தலைநகரத்தில் வாழ்வோர் தொகை, 20,000.

உலகில் நீக்ரோக்களால், நீக்ரோக்களுக்காக நடத்தப்படும் நீக்ரோ குடியரசுதான் "லைபீரியா". இரப்பர் இரும்பு ஆகிய இரண்டு பொருள்களும் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு உயிர் ஊட்டுகின்றன. உலகிலுள்ள கார்களுக்குச் சக்கரம் தரும் லைபீரியாவின் தலைநகரத்தில்கூட மோட்டார் வண்டியைப் பார்ப்பது கடினம். சைக்கிளைக்கூட அதிகமாகக் காணமுடியாது. பெரும்பான்மையான மக்கள் இலகு நடை வண்டியில்தான் பயணம் செல்லுகின்றனர்.

சேறோடும் வீதிகளை நாடெங்கும் பார்க்கலாம். நல்ல பாதை எங்கே என்று தேடுவோர் தேடிக்கொண்டே இருக்கவேண்டும். உலகத்தின் மிகமோசமான பாதை என்பதுதான் லைபீரியாவிலுள்ள மிகச் சிறந்த பாதையாக இருக்கும். போக்குவரத்துக்குகந்த பாதைகளின் மொத்த நீளம் பத்தே மைல்தான், அதிலும் பாதி தலைநகரத்திற்குள்ளேயே முடிவடைந்துவிடுகின்றது.

'பாலங்கள்' என்ற பெயரை, இங்கே உள்ளவர்கள் கேட்டே இருக்கமாட்டார்கள். ஆறுகளையும், கால்வாய்களையும் கடக்க, வழுக்கலானபலகைகளைக்குறுக்கே போட்டிருக்கிறார்கள். மழை அதிகமாகப் பெய்யும்பொழுது அப்பலகைகளும் இருக்கமாட்டா.

அடை மழையும் பேய்மழையும் போட்டியிட்டுப் பொழியுமிடம் லைபீரியா. ஒருமுறை தலைநகரத்தில் பெய்த மழையின் அளவு மட்டும் 260 அங்குலங்கள் (ஆறே மாதத்தில்)

1847ம் ஆண்டு முதல் சுதந்திரக் குடியரசாகக் காட்சி தரும் 'லைபீரியாவில், ஆபத்துக்கு உதவிசெய்ய நல்ல மருத்துவர்கள் கிடையாது. நாடு முழுவதும் தேடினால் ஒரு அரை டஜன் டாக்டர்கள் கிடைத்தால் அதிசயம். இந்தச் சுதந்திரக் குடியரசில் 1931ம் ஆண்டுவரை சுகாதார இலாகாவே கிடையாது.

'கருமி உள்ள சத்திரம், கடவுள் இல்லாத கோவில், துட்டு இல்லாத கஜானா, துருப்பு இல்லாத சேனை இவைகொண்ட இந்த ராஜ்யத்தைத் தந்தேன் மாமுனியே!' என்று சந்திரஹரி நாடகத்தின் போது கலைவாணர் கூறுவார். அதைப்போல லைபீரியாவில் ஒரு அதிசயம் உளது. அத்தகைய அதிசயம் கல்லூரி வடிவில் காட்சி தருகின்றது. நாட்டுக்கு ஒரே கல்லூரி. ஆனால் நூல் நிலையம் இல்லை. ஆய்வுக்கூடம் இல்லை. விஞ்ஞான சாதனங்கள் கூடச் சரியாகக் கிடையாது.

இன்று அந்தக் கல்லூரி லைபீரியப் பல்கலைக் கழகமாகப் பரிணமித்திருக்கின்றது.

ஏழ்மை இந்நாட்டின் தனியுடைமை. சராசரி வருமானம் ஆண்டொன்றுக்கு 400 ரூபாய் கூட இல்லை. இங்கே உள்ள வறுமையின் கோரத்தைச் சித்தரிக்க ஒரு உதாரணம்; ஒருமுறை கண்காட்சி ஒன்றில் வைக்கப்பட்டுள்ள பொருளை நாட்டின் அமைச்சர்களில் ஒருவரே திருடிவிட்டார்.

உணவுப் பொருள் உற்பத்தி மிகக்குறைவு. அடிக்கடி பெய்து கொண்டிருக்கும் மழை திருட்டுத் தொழில் புரிவோருக்குச் சாதகமாக இருக்கின்றது. 'திருடுவது இந்நாட்டின் தேசிய விளையாட்டு' என்றுகூடக் கூறலாம். அரசாங்க அலுவலகங்களிலும் இக்கலை தலை தூக்கிவிட்டது. ஒரு தடவை இத்தாலி தூதுவராலயத்திலிருந்து இரும்புப் பெட்டியையே களவாடிக் கொண்டு சென்றுவிட்டனர். இன்னொரு முறை குடியரசுத் தலைவர் தேர்தலில், வென்றவர் பெற்ற வாக்குகள் 2,43 000. ஆனால் நாட்டில் வாக்குரிமை பெற்றவர் தொகையோ 15,000 பேர்தான்.

மிகவும் பிற்பட்ட நாடு. சுகாதாரத்திற்குச்செலவிடப்படும்தொகையை விட அதிகமாக பாண்ட் செட் வாங்கச் செலவழித்தனராம்.

ஏற்றுமதியில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஐக்கிய அமெரிக்காவுக்குப் போகிறது. 1951ம் ஆண்டுவரை 'லைபீரியாவுக்கு டெலிபோன் வசதி கிடையாது. அஞ்சல் போக்குவரத்து இருந்தாலும், அது தலைநகரத்திற்கு வெளியே அதிகமாகத் தலைகாட்டுவது கிடையாது.

மன்ரோவியாவின் அஞ்சல் தலைவர் ஹருலர், வெளிநாட்டுத் தூதர் ஒருவரிடம் 600 ரூபாய் கடன் கேட்டாராம். எதற்காக? தூதருக்கு வரும் கடிதங்களை அவரிடம் ஒழுங்காகச் சேர்ப்பதற்குத்தான்.

வில்லியம் வாகனாட் ஷட்ராட்டப்மன் என்பவர்தான் 'லைபீரிய சுதந்திரக் குடியரசுத் தலைவர். சலியாத உழைப்பாளர். 1500 ரூபாய்க்கு மேற்பட்ட ஒவ்வொரு அரசாங்கச் செலவினமும் அவருடைய ஒப்புதல் பெற்றேசெய்யப்படவேண்டும்.

குடியரசு என்றாலும், இங்கே ஒரே கட்சி ஆதிக்கம்தான் வலுத்திருக்கிறது. நாடாளும்பொறுப்பை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களின் உறவினர்களும் பங்குபோட்டுக்கொண்டுள்ளனர்.

அரசாங்க அலுவல்களில் அமர விரும்புவோர் இக்கட்சியின் ஆதரவு பெற்றால்தான் முடியும். அதோடு சம்பளத்தில் ஒரு பங்கைக் கட்சி வளர்ச்சிக்கென நன்கொடையாகத் தரவேண்டும்.

அதிசயக்குடியரசு, அடிமை நிலையிலிருந்து சுதந்திரம் அடைந்திருக்கின்றது. இது சுதந்திரம்தானா என்ற கேள்வி எழலாம். ஆனாலும் லைபீரியா நீக்ரோக்கள் மாற்றார் தயவின்றி நடத்தும் ஒரு சுதந்திரக் குடியரசு. ஐக்கிய அமெரிக்கச் சட்டத்தை ஒட்டி, லைபீரியாவின் அரசியல் சட்டம் எழுதப்பட்டிருக்கின்றது.

போதிய கல்வி அறிவும்,பொறுப்புணர்ச்சியும் மக்கள் பெற்றால், ஜனநாயகம் வெற்றிகரமாக செயல்படும். ஆயிரம் சொல்லி என்ன பயன்? இன்று உலகில் லைபீரியாவும் ஒரு சுதந்திரக் குடியரசு! ★

இளமைப் பித்தம்

—[இளந்தமிழன்]—

'பித்தம்' என்ற சொல்லைப்பற்றி ஒரு நூலே எழுதிவிடலாம்! அத்தனை பொருள் பொதிந்த சொல் அது! பல வகைத் துறைகளைக் கொண்டு பல தரப்பட்ட மனிதர்களின் மனதை ஆட்டிப்படைப்பது—பித்தம்!

'பைத்தியம்—பித்தம்' இரண்டும் வேறுபாடு இருப்பதுபோல் தோன்றும் ஒற்றுமைச் சொற்கள்!

எழுதுவது ஒரு பைத்தியம்!—அதைப்படிப்பது ஒரு பைத்தியம்! இந்த உலகில் வழக்கமாக நடப்பவை அனைத்துமே பைத்தியங்கள்தாம்! அந்தப் பலதரப்பட்ட வைத்தியங்களுள் ஒன்றுதாம் 'இளமைப் பித்தம்'

'எல்லா மனிதர்களும் எல்லாக் கலைகளிலும் சிறப்பான தேர்ச்சி பெறுதல் என்பது முடியாத காரியம்'—என்று சொல்லுகிறது ஒரு நீதி நூல்! ஆனால் இது உண்மையோ பொய்யோ, 'எல்லாப் பைத்தியங்களும் எல்லா மனிதர்களையும் ஆட்டிவைக்க முடியாது' என்பதுமட்டும் உண்மை! சிலரைக் குடிப்பழக்கம் ஆட்கொண்டால், சிலரைப் பொடிப் பைத்தியம் அடிமை ஆக்கி இருக்கும்! ஆனால் உலகில் உள்ள எல்லோரும் விரும்பி ஏற்றுக்கொள்ளும் பைத்தியம் — 'இளமைப் பைத்தியம்' இளமையின் தனிச்சிறப்புத்தானே இது!

'இளமை'—ஒரு மதிப்பு வாய்ந்த, ஆற்றல் பொருந்திய காலம்! ஆனால் இந்த உயர்ந்த உண்மை, அந்தப் பருவத்தினருக்குத் தெரியாதது என்னவோ ஒத்துக்கொள்ள வேண்டியதுதான்! வயதான தாத்தாக்களுக்குத்தான் இந்த இரகசியம் தெரிகிறது! தெரிந்துதான் அதையே நினைத்து ஏங்குகிறார்கள். ஏங்கி என்ன நன்மை? கடந்த காலம்தான் வரப்போவதில்லையே!

இத்தகைய இளமைப் பருவத்திற்கு அரசன், அடிமை என்ற வேறுபாடு உண்டா? இல்லை! மன்னவன் இளையவனாய் இருக்க ஆசைப்படமாட்டானா என்ன? அந்தப்புரத்திலே செலவிட ஆயிரம் ஆண்டுகள்கூடப் போதாதே அவனுக்கு! இப்படி எல்லோரும் அவரவர் வசதிக்கும் வாய்ப்புக்கும் தக்கபடி, தங்களுக்கு இளமை திரும்பவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர்!

கிரேக்க வரலாற்றிலே பெருமையாகப் பேசப்படுகின்றவன் 'உலிசெஸ், டிராய்நகரப் போரில், வெற்றிக்கு வித்திட்டவன் உலிசெஸ். அவன் வீரம் உலகறிந்த ஒன்று. அவனுக்குக்கூட வயதான காலத்திலே இளமை துளிர்த்திருக்கிறது!

போர்முடிந்து நேரே வீட்டிற்குத் திரும்பவில்லை அவன்! இடையே பல துன்பங்கள்! எல்லாவற்றையும் வென்று நாடு வருகிறான் அவன்.

இதற்குள் அவன் இறந்துவிட்டான என்றுகூறி, அவன் மனைவியைத் தட்டிக்கொண்டுபோக வாலிபர்களுக்குள் போட்டி! ஆனால் அவளோ உறுதியாக யாரையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறாள். அவள் எதிர்பார்த்ததைப் போலவே நீண்டநாட்கள் கழித்து உலிசெஸ் திரும்புகிறான்! அவன் மனைவி மகிழ்வுமிகக்கொள்ளுகிறாள்! இனிக் கணவனை விட்டு நீங்காது இருக்கலாம் என்று எக்காளப் பாட்டுப்பாடுகிறாள்!

ஆனால் அவனோ — மறுபடியும் நாட்டைவிட்டுச்செல்ல விரும்புவதாகத் தெரிவிக்கிறான்! அதற்குக் காரணங்களாக எவ்வளவோ சொல்லுகிறான் அவன். அவற்றுள் ஒன்று: "வயதான மனைவியின் முகத்தையும், மலைகள் நிரம்பிய நாட்டையும் பார்த்துக்கொண்டு இருக்க என்னுடைய அறிவு இடம்கொடுக்கவில்லை" என்பது!

மனைவிக்கு வயதாகிவிட்டதாம்! அவளுடைய முகத்தைப் பார்க்கக் கண் கூசுகிறதாம் அவனுக்கு! எவ்வளவு ஏளனம் பாருங்கள்! தான் இன்னும் இளமைக் கட்டுத் தளராத எழில் பூத்துக் குலுங்கும் வாலிபனாகவே இருப்பதாக எண்ணிக்கொண்டு பேசுகிறான் அவன்! இதை வெகு அழகாக நகைச்சுவையோடு விவரிக்கிறார் டென்னிசன்!

ஆண்களுக்குத்தான் இப்படி இளமையின் மேல் மோகம் என்றால் பெண்களைப்பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. 40-வயதைக் கடந்துவிட்டாலும் 18-வயது ஆகாத வாலைக் குமரி என்றுதான் நினைத்துக்கொள்ளுவார்கள் அவர்கள்! மேல்நாடுகளில் ஒரு பெண்ணின் வயதைக் கேட்பது அநாகரிகமாம்! அப்படிக் கேட்டுவிட்டாலோ அந்தப் பெண் திட்டாமல் போகமாட்டாள்! துடுக்கானவளாக இருந்தால் இரண்டு அறையும் வைக்கத் தயங்கமாட்டாள்! ஒரு பெண்ணை அழைக்கவேண்டும், என்றால் 'அம்மா' என்று கூப்பிட்டுவிட்டால் போதும்! ஒத்திகையே தேவை இருக்காது! 'பொல பொல' என்று கண்ணீர் வந்துவிடும்!

இப்படி எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு போட்டிக்கு வருவது ஏன்? "இளமை"—என்ன பொருள் இதற்கு? இது என்ன அழகுப் பொருளா? கண்ணுக்குத் தெரியுமா அந்த அழகு? தெரியாது! வேறு ஒரு பொருளை அண்டிவந்து நம் உயிரை வாங்கும் பெரும் பொருள் அது! அழகான வெண்மலர் வாலிபம் நீங்கிக் காய்ந்து கீழே விழுந்துவிட்ட பிறகு, யார் அதைச் சிந்துவார்கள்? பதினெட்டு வயதுப் பாவையுடன் அறுபது வயதுப் பேரிளம் பெண் அழகுப் போட்டிக்குப்போனதாக யாராவது கூறினால், அவருக்கு 'நகைச்சுவை மன்னர்' என்று பட்டம் கொடுத்துப் பொன்னாடை போர்த்திவிடலாமே!

'இளமை' — பலகோடி அணுக்களின் இறுகிய நிலை! அந்த இறுகிய நிலை தளரும்போது வருவது முதுமை!

ஆனால் அதன் காலத்திற்குள் அது செய்துவிட்டுப்போகும் ஆட்டம் என்ன? பாட்டம் என்ன? அப்பப்பா — இளமையைப்பற்றி ஒரு மாகாவியமே வரைந்துவிடலாமே!

பணக்காரனை ஏழை ஆக்குகிறது! ஏழை, தன் வனப்பால் பணக்காரக் காதலியைப் பெறுகிறான்!—இன்னும் எவ்வளவோ நடக்கிறது உலகில்!—அனைத்திற்கும் காரணம் இளமை!

அழகான ரோசா மலரின்மேல் ஆசைப்பட்டு அந்தப் பறிக்கப் போகின்றனர் சிலர்! ஒருவன் சாமர்த்தியமாக முள் குத்தாமல் மலர்களைப் பறித்துக்கொண்டு வந்துவிடுகின்றான். ஒருவனை முள் குத்திக் கீறுகிறது. இருப்பினும் பொறுத்துக்கொண்டு மலரோடு வருகிறான். மூன்றாமவன் துன்பப்பட்டும் மலர் கிடைக்கப் பெற்றான் இல்லை.

இதுவேதான் இயற்கையின் வெறியாட்டம் என்றும் கூறலாம்! மலர் பறிக்கச் சென்ற மூன்றாமவன் போல் இளமையிலேயே முதுமை படருகிறது சிலருக்கு! பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது அவர்களை. "வறுமையும்" இளமைத் தோற்றத்தை அழிப்பதில் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளுகிறது! அதனால்தானே என்னவோ "கொடிது கொடிது இளமையில் வறுமை" என்றார்கள்!

ஆனால் இதற்கு நேர் எதிராக வயது கடந்தவர்கள் இளைஞர்களைப்போல் காட்சியளிப்பதையும் நாம் காண்கிறோம்! வயது கடந்தும்கூட அவர்கள் முகத்தில் ஒரு கவர்ச்சி இருப்பது நன்றாகத் தெரிகிறது! இது, மலர் பறிக்கச் சென்ற முதலாமவன் போன்றது!

இதை மெய்ப்பிக்க வெகு தொலைவுக்குப் போகவேண்டியதில்லை. நம்முடைய பிசிராந்தையார் கிழவர் தாம்! ஆனாலும் நரையில்லை! தோல் சுருங்கிக் காணப்படவில்லை. பற்கள் விழப்பெற்றார் இல்லை! நடையில் தள்ளாட்டம் இல்லை! மூச்சு வாங்கவில்லை — பேச்சில் இளமை! எண்ணத்தில் இளமை!! செயலில் இளமை!!! — எங்கும் இளமை! இளமை! இளமை! இந்த "இளமை" என்ற சொல்லே கற்கண்டாய் இனிக்கிறது!

இதில் ஒரு விசித்திரம் என்னவென்றால், இந்த இளமைக்குரிய வயது நாட்டுக்கு நாடு வேறுபடுவது! நாற்பத்தைந்து வயது கடந்தவர் மேல் நாடுகளில் இளைஞர் எனப்படுகிறார். இங்கு முப்பத்தைந்தைக் கடந்துவிட்டாலே கிழவர் என்று கூறிவிடுகிறார்கள்! மற்றவர் கூறுவதற்கு முன்னால் அந்த வயதுக்குரியவரே ஒத்துக்கொள்ளுகிறார்! நகைப்புக்குரிய செய்தி அல்லவா இது!

இளமையைப்பற்றி என்ன என்னவோ சொல்லியாகிவிட்டது. "இளமையாக இருப்பது எப்படி?" என்று சொல்லவேண்டாமா? இளமையாக இருப்பதற்கு என்னென்னவோ வழிகள் கையாளப்படுகின்றன! முக்கியமாக முதலில் நல்ல உள்ளம் வேண்டும்! நல்ல நினைப்பு வேண்டும்! கோபத்தை அடக்கும் ஆற்றல் வேண்டும்! அமைதியான நடத்தை வேண்டும்! எப்போதும் இளைஞர்களோடு பழகவேண்டும்! குழந்தைகளோடு கொஞ்சவேண்டும்! இரக்கம், அனுதாபம் வளர வேண்டும்! நான் இன்னும் பெரியவனாகவில்லை என்னும் எண்ணம் எப்போதும் இருக்கவேண்டும்! தனக்குமுன் தீர்க்கப்படாத பெரிய வேலைகள் இருப்பதாக எண்ணிக் கொள்ளவேண்டும்! இன்னும் எவ்வளவோ!

ஆனால் எல்லோரும் இளைஞர்களாக இருக்கமுடிகிறதா? மேலே சொன்ன வழிகளைத் தவறாமல் கடைப்பிடிக்க முடிகிறதா? முடியவில்லையே! முடிந்துவிட்டால், உலகம் பளு தாங்காதே! இருந்தாலும் முயலுங்கள்! பாதி வெற்றியாவது கிடைக்கட்டும்! ✯

4-ம் பக்கத் தொடர்ச்சி

தோன்றும் என்பதனை அன்று எல்லோரும் விளக்கினர்.

இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக ஒரு நிகழ்ச்சியினைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

திருக்குறள் உயர்வான நூல்தான், திருவள்ளுவர் பெரும் புலவர்தான், இதிலே யாருக்கும் ஐயமில்லை. ஆனால் இந்தப் பெருமையை — புகழ்ச்சியை நமக்குள் நாமே கூடிப்பேசி மகிழ்ந்து கொள்ளுவதிலே மட்டும் சிறப்பு ஒன்றும் இல்லை. நாம் பெற்றுள்ள இந்தச் சிறப்பை விலையில்லா அரும்பொருளை ஈடில்லா மாணிக்கத்தை உலகிற்குக் காட்டவேண்டும். உலகம் ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். அதை எப்படிச் செய்துமுடிக்கலாம்!

அப்பாதுரையார் கூறியதுபோல்,

திருவள்ளுவர் பெயரால் நிறுவனம் அமைத்து உலகு எங்கும் தொண்டர்கள் அனுப்பித் திருக்குறளைப் பரப்பி அந்த நெறியை வளர்க்கவேண்டும் என்பது ஒரு சிறந்த வழிதான். ஆனால் இந்த வழிக்கு ஏராளமான பொருட் செலவும், பிறவும் ஆகும். அதற்கு நம்முடைய நிலை இடம் தருமா என்பதையும் நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

வேறு ஒருவழியுமே இல்லையா என்றால் இருக்கிறது. பொருள் செலவு மிகுதி ஆகாத வழி ஒன்று இருக்கிறது. இன்று உலகில் பெரு மொழியாகவும், எல்லாக் கலைகளும் 'இதன்பால் உள' என்று சொல்லத்தக்க வகையிலும், எல்லாரும் ஏற்றுக் கற்று அறியும் மொழியாகவும் ஆங்கிலம் விளங்குகின்றது. அந்த மொழியில் **நல்ல மொழி பெயர்ப்பு** ஒன்றினைத் திருக்குறளுக்கு ஆக்கி அளிப்பது சிறந்த தொண்டாக அமையும். இப்போது ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புகள் இல்லையாஎனின் இருக்கின்றன. ஆனால் இந்த விழாவில் கலந்து உரையாற்றிய மேற்குப் புலத்து அம்மையார் மோனிகா பெல்டன் அவர்கள், திருக்குறளின் அருமை பெருமைகளையெல்லாம் பேசி, தமிழரின் தனிப் பண்பைப் பாராட்டிப் பேசி, திருக்குறளுக்கு ஒரு நல்ல, உண்மையான ஆங்கில மொழிபெயர்ப்பை வெளியிடுங்கள்.

என்று வேண்டிக்கொண்டார்கள். ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட அந்த அம்மையார் சொல்வதில் ஆழ்ந்த பொருள் இருக்கும் அல்லவா? உண்மையான மொழிபெயர்ப்பு வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்!

அது வெளிநாட்டாருக்கு மட்டும் அல்ல; நம்முடைய நாட்டுக்கும் தான். இங்கு, வள்ளுவரை அவரவர்கள், அவரவர்களது எண்ணங்களுக்கு ஏற்பக் காணுவதை விடுத்து, உண்மையான வள்ளுவரைக் காண முயலல்வேண்டும்.

கண்டால் உய்வோம்; உயர்வோம்.

தேனாம்பேட்டைத் திருவிழா இதற்கு வழிகாட்டுமாக!

வாழ்க வள்ளுவர் நெறி!

✶